விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 04 | திங்கட்கிழமை | (20.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 276

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத் சீமெந்து தில் முதலாம்தரத் தொழிற் சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசியல் தஞ்சக் கோரிக்கையை அவுஸ்திரேலியா நிராகரித்தது

### தமிழர்கள் எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரி அங்குள்ள இலங்கையர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவுஸ்திரேலிய அரசுக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் கடந்த நான்கு நாட்களாக ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் அவுஸ்திரேலிய அரசு இந்த விடயத்தில் கடுமையான போக்கையே கடைப்பிடித்துவருவதாகவும், அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்துள்ளவர்களை விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் மட்டக்களப்புக்குச் செல்கிறார்

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே நாளை மறுதினம் மட்டக்களப்பிற்குச் செல்லவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ள சந்திப்பை முன்னிட்டே அவர் மட்டக்களப்பிற்குச் செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலும், இராணுவத் தரப்பில் 23 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன தலைமையிலும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையில் புல்லுமலைத் தாக்குதல் சம்பவம் மற்றும் புலிகளின் முகாம்கள் பற்றிய விவகாரங்களும் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு நொண்டிச்சாட்டுச் சொல்கிறது அரசு

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகக்கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது அதற்கெதிரான கருத்தினை முன்வைத்து வருவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

தற்போதைய சமாதான இழுபறி நிலை தொடர்பாக சமாதானச் செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்பில்லாமல் செயற்பட்டு வருவதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானம் தொடர்பில் ஒரு தீர்மானம் இல்லாமலிருப்பதாகவும், ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளமை தமிழ்மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பயிற்சிக்கு அனுமதி கிடைக்காத பட்டதாரிகள் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ் இரண்டாவது தடவையாக பெயர்கள் வெளியான பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் அடுத்த இருவாரங்களுக்குள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சிகள் ஆரம்பிப்பது தொடர்பாக இன்று நிதியமைச்சில் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பட்டதாரிகளுக்கான பயிற்சியில் கலந்துகொள்வதற்கான அனுமதி கிடைக்கப்பெறாத பட்டதாரிகள் தமது முறைப்பாடுகளை இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் நிதியமைச்சின் முகாமைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் சீருடை வைத்திருந்த தமிழ் இளைஞர்கள் மூவர் ஓமந்தையில் கைதாகி விடுதலை

விடுதலைப் புலிகளின் சீருடைகளை வைத்திருந்த காரணத்தினால் தமிழ் இளைஞர்கள் மூவர் ஓமந்தை சோதனைச் சாவடியில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் 8.30 மணியளவில் கைதுசெய்யப்பட்ட அவர்கள் சுமார் 3 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூதூரைச் சேர்ந்த செண்பகக்குட்டி விஜயராஜா (24 வயது), சம்பூரைச் சேர்ந்தவர்களான காளிதாசா ரவீந்திரன் (28 வயது), தர்மலிங்கம் தயாகரன் (29 வயது) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டவர்களாவர்.(ச)

### கனடா பொங்குதமிழ் நிகழ்வால் சிங்கள அமைப்புக்கள் குழப்பம்

கனடாவில் உள்ள ரொறன்ரோ நகரில் எதிர்வரும் 25 ஆம் திகதி மிக எழுச்சியுடன் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு குறித்த செய்திகளால் அங்குள்ள சில சிங்கள அமைப்புக்கள் குழப்பம் அடைந்துள்ளதாக அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் கனடா ரொறன்ரோ நகரில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுகள் நிறுத்தப்படலாம் என்ற விசமத்தனமான பிரசாரங்களை அந்த அமைப்புக்கள் மேற்கொண்டு வருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நீர்கொழும்பில் சூட்டுச் சம்பவம் பொலிஸ் பொறுப்பதிகாரி பலி

நீர்கொழும்பு பமுனுகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஷெல்டன் ரொட்ரிகோ நேற்று பிற்பகல் கடமையிலிருந்த கான்ஸ்டபிளொருவரால் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் எம்.சேனாரத்ன என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் விடுமுறை கோரியதாகவும் இதற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மறுப்புத் தெரிவித்த சமயம் ஏற்பட்ட வாய்த்தகராறையடுத்தே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ரி- 56 ரக துப்பாக்கி இக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவரின் தலையிலும் கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஜனாதிபதி தாமதப்படுத்துவது ஏன்?

# அரசுக்கு எதிராகத் தொடர் போராட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் நடத்த ஐ.தே.மு முஸ்தீபு

(கொழும்பு)

தான் பதவிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் 70 சதவீத சம்பள உயர்வையும், பட்டதாரிகள் அனைவருக்கும் நிரந்தர நியமனங்களையும் வழங்குவதாக உறுதியளித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைத்தது. மூன்று மாதங்கள் அல்ல ஆறுமாதங்கள் ஆகிவிட்டன. சம்பள உயர்வு இல்லை. மேலும் பட்டதாரிகளுக்கு பயிற்சிகளை மட்டுமே வழங்கவிருக்கின்றது.

இதனால் எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து நாம் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம். கோட்டை ரயில் நிலையம் முன்பாக அன்றைய தினம் 25 ஆயிரம் பேர்வரை கூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்தும் போராட்டங்கள் நடைபெறும். ரணில் விக்கிரமசிங்க தலையில் புதிய மக்கள் அரசாங்கமொன்றை அமைக்கும் வரை எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சி ஒன்றுக்கு எந்தநாளும் பெரும் பான்மை இருக்கவேண்டும் என்றில்லை. ஒருநாள் மட்டும் பெரும்பான்மை இருந்தால் போதுமானது. 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டுவரை பொ.ஐ. முன்னணி அரசு பெரும்பான்மையை வைத்திருந்தது. 2001 ஆம் ஆண்டு ஒரே ஒரு நாள் மட்டும் எமக்குப் பாராளுமன்றில் பெரும்பான்மை தேவைப்பட்டது. அதனைப் பெற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் குண்டு வெடிப்புகள் 28 பேர் பலி;36 பேர் படுகாயம்

(ஈராக்)

ஈராக்கில் பக்தாத் நகரில் கடந்த வெள்ளிக் கிழமை காலை ஈராக்கிய பொலீஸார் சென்ற வாகனத்தின் மீது தற் கொலைப் படையைச் சேர்ந்த ஒருவர் வெடிபொருள்கள் நிரப்பபட்ட காரை மோதியதில் 5 பேர் கொல்லப்பட்டனர். 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் ஈராக் தேசியப் படையைச் சேர்ந்தர்களவார் டைக்ரீஸ் நதி அருகே உள்ள ஹை.்.பா தெருவில் இந்த சம்பவம் நடந்திருக்கிறது.

இந்த சம்பவத்துக்குப் பிறகு அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மத்திய பக்தாதில் வட்டமிட்டு வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை பக்தாத் பொலிஸ் நிலையம் மீது நடந்ததற் கொலைப் படைத்தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டனர். அதே தினத்தில் பகூபா என்ற இடத்தில் வாகனத்தில் சென்ற 12 பொலிஸாரை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஈராக்கில் கிர்குக் பகுதியில் உள்ள ராணுவ தலைமையகம் முன்பாக நடந்த கார் குண்டு வெடிப்பில் 23 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் கார்குண்டு வெடிப்பு என்பது இப்போது சாதாரணமானதாகிவிட்டது. தினசரி குண்டு வெடிப்பால் 40 முதல் 50 பேர் வரை பலியாகி வருகின்றனர்.

கிர்குக் பகுதியில் உள்ள ராணுவ தலைமையகத்தில் ஆள்சேர்ப்பு பணி நடை பெற்றுக் கொண்டிருந்த போது ஏராளமான இளைஞர்கள் இந்த அலுவலகத்திற்கு முன் பாக காத்திருந்தனர். அப் போது கார் குண்டு ஒன்று பலத்த சத்த த்துடன் வெடித் ததில் அங்கு நின்றிருந்த 23 பேர் உடல் சிதறி பலியாயினர். 16 பேர் பலத்த காயமடைந்தனர். சம்பவம் நடந்த பகுதியில் சதையும், ரத்தமும் சிதறிக் கிடந்தன.

இதற்கிடையே இரண்டு அமெரிக்கர்களையும் ஒரு பிரிட்டன் நாட்டவ ரையும் கடத்தி சென்ற தீவிரவாதிகள் இந்த மூன்று பேரையும் கொல்லப் போவதாக எச்சரித்துள்ளனர். (ந-7)

# தேர்தலுக்கு அதிபர்கள் எதிர்ப்பு

(ரஷ்யா)

ரஷ்ய நாடாளுமன்ற கீழ். சபைக்கான (டூமா) நேரடித் தேர்தலை ரத்து செய்யும் நோக்கில் அதிபர் விளாடிமிர் புடின் மேற் கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைக்கு முன்னாள் அதிபர்கள் கோபச்சேவும், ஜெல்சினும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தற்போது ரஷ்ய நாடாளுமன்ற கீழ் சபையின் 450 உறுப்பினர்களில் சரிபாதிப் பேர் (225) மற்றும் பிராந்திய ஆளுநர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்த நேரடித் தேர்தல் முறையை ரத்து செய்து விட்டு, அரசியல் கட்சி களுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடங்களை ஒதுக்கும் முறையைக் கொண்டுவரப் பேவததாக ரஷ்ய அதிபர் செப்ரம்டர் 13-ல் அறிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிளவுபடாத சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் மெனகல் கோபச்சேவ் அறிக்கை விடுத்துள்ளார். புடின் நடவடிக்கையைக் கண்டித்து ரஷ்யாவின் முன்னாள் அதிபர் பொரிஸ் ஜெல்சினும் அறிக்கை விடுத்துள்ளார். (ந-7)

# தாய்லாந்தில் நீதிபதி படுகொலை முஸ்லிம் ஆசிரியர்கள் மீது புகார்

(தாய்லாந்து)

தாய்லாந்தில் உள்ள முஸ்லிம் மதரசாக்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்களிடையே பிரிவினைவாதத்தை தூண்டுவதாகவும் அரசு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்த அவர்களை திசை திருப்புவதாகவும் தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்வத்ரா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

தாய்லாந்தில் புத்த மதத்தைச் சேர்ந்த நீதிபதி ரேபன் ருவாங்கயூ என்பவரைக் கடந்த வெள்ளிக்கிழமை மர்ம நபர்கள் சிலர் சுட்டுக் கொன்றனர். கடந்த ஜனவரியில் இரந்து பல்வேறு கொலை, குண்டு வெடிப்பு வழக்குகளை இவர் விசாரணை செய்து வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த படுகொலை நடத்தப்பட்டது. ரேபனின் மனைவி துவாங்நபாவும் நீதிபதியாக இருக்கிறார். அவர் தனது கணவரின் கொலைபற்றி கூறுகையில், நீதிபதிகளுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை என் கணவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் எடுத்துக்காட்டி உள்ளது. அப்படியானால், சாதாரண மக்கள் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும். என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

நீதிபதி ரேபன் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்துள்ள தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்வத்ரா முஸ்லிம் ஆசிரியர்கள் மீது பகிரங்கப்புகார் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில் மதரசாக்களில் உள்ள முஸ்லிம் ஆசிரியர்கள் தங்கள் மாண வர் களிடம் பிரிவினை வாதத்தை தூண்டுகின்றனர். அரசு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்த அவர்களுக்குக்கற்றுக்கொடுக்கிறனர். குறிப்பாக சிறந்த அறிவுத்திறனுள்ள மாணவர்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்கின்றனர். என்று குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கிடையில் நீதிபதி படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர், நீதிபதி படு கொ லை யில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது. மற்ற இருவரும் விடுவிக்கப் பட்டுள்னர். (ந-7)

# எவ் –16 ரக போர் விமானங்களை அமெ.பாகிஸ்தானுக்கு வழங்கும்

(இஸ்லாமாபாத்)


நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு சில எவ்- 16 ரக போர் விமானங்களை வழங்குவதறக் அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி ஏயர்- மார்ஷல் கலீம் சதாத் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் மீதான அமெரிக்காவின் மனோபாவம் மாறியுள்ளதாகவும் பாகிஸ்தானுக்கு எவ்-16 ரக விமானங்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்ததாக கராச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் சதாத் கூறியிருக்கிறார்.

1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதிகளில் 40 எவ்-16 ரக விமானங்களை பாகிஸ்தான் வாங்கியது. ஆனால் பல்வேறு தடைகள் காரணமாக கூடுதலாக யு.எஸ். நவீன ஜெட் போர் விமானங்களை கொள்வனவு செய்யும் பாகிஸ்தானின் முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை எனவும் ஏயர் மார்ஷல் கலீம் சதாத் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் பயங்கர வாதத்தைக் கட்டுப்படுத்தும் போரில் அமெரிக்காவுடன் பாகிஸ்தான் இணைந்து செயல்படுவதற்கு பரிசாகவும் இந்தியாவுக்கு சமமான நிலையில் பலம் பெறுவதற்கு வசதியாகவும் நவீன ஜெட் விமானங்களை வழங்க வேண்டுமென புஷ் நிர்வாகத்திற்கு பாகிஸ்தான் கோரிக்கை விடுத்தது.

ஆனால், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள எப்- 16 ரக விமானங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை அமெரிக்கா வழங்கிய போதும் நவீன ஜெட் விமானங்கள் வழங்குவது குறித்து எந்த ஒப்பு தலையும் தரவில்லை. இந்தியா- இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு கவலை அளிப்பதாக உள்ளது. இருந்த போதிலும், அது இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு. எனவே அதை ஆட்சேபிக்க இயலாது என வும் சலீம் சதாத் மேலும் கூறினார். (ந-7)



தலிபான் தீவிரவாதிகளால் கைது செய்யப்பட்டு ஆப்கானிஸ்தானில் சிறை வைக்கப்பட்டிருந்த 360ற்கு மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் விடுதலை செய்யப்பட்டு தாயகம் திரும்புகின்றார்கள். அடுத்த மாதம் உயர் மட்ட போச்சு வார்த்தைகளுக்கு உடன்பாடு எட்டப்பட்டதையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.




# ஆப்கன். அதிபரை கொல்ல முயற்சி 3 தலிபான் தீவிரவாதிகள் கைது

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கன் அதிபர் ஹமீத்கர்சாய் தேர்தல் பிரசாரத்துக்கு சென்ற போது அவரைக் கொல்ல முயன்ற தலிபான் தீவிரவாதிகள் மூன்றுபேர் அதிரடியாகச்சுற்றி வளைக்கப்பட்டனர்.

ஆப்கனில் அடுத்த மாதம் 9 ம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்காகச் சூறாவளிச் சுற்றுப் பயணம் மூலம் அதிபர் ஹமீத் கர்சாய் தீவிரபிரசாரம் மேற்கொண்டுள்ளார். காபூல் புறநகர் பகுதியான கார்டெஸ்சுக்கு ஹெலிகொப்டரில் கர்சாய் சென்ற போது ஹெலிகொப்டர்மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடந்தது. அதிர்ஷ்டவசமாக அதில் கர்சாய் தப்பினார். எவரும் காயம் அடையவில்லை.

இதையடுத்து உஷாரான பொலிஸார் தாக்குதல் நடத்தி மூன்று தீவிரவாதிகளை உடனடியாகச் சுற்றி வளைத்தனர். ரொக்கெட் வீசியவுடன் மூன்று தீவிர வாதிகளும் மோட்டார் சைக்கிளில் தப்பிக்க முயற்சித்தபோது அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். அனைவரும் 20 முதல் 23 வயதுடைய வாலிபர்கள்.

விசாரணையில் கர்சாய் சென்ற ஹெலிகொப்டர் மீது தாக்குதல் நடத்தியதை அவர்கள் ஒப்புக் கொண்டனர். தேர்தலைச் சீர்குலைக்க தலிபான் தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதகவலையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ள தகவலை உள்துறை அமைச்சர் செய்தித் தொடர்பாளர் லத்புல்லா மஷால் தெரிவித்திருக்கிறார். (ந-7)

# ஐ.நா.செயலரின் கருத்து தவறானது; அமெ. வெளியுறவு அமைச்சர் தகவல்

(வொஷிங்டன்)

ஈராக் மீது அமெரிக்காவும் இதர நாடுகளும் மேற்கொண்ட போர் உலக அமைதியைக்கருத்தில் கொண்டு சட்டப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையென அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவெல் தெரிவித்திருக்கிறார்.

ஈராக் மீதான அமெரிக்கப்போர் சட்ட விரோதமானது என்று ஐ.நா. பொதச் செயலர் கோபி அனான் பிபிசி தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை அவரை நேரில் சந்தித்த கொலின் பவெல் அமெரிக்காவின் கருத்தை அவரிடம் தெரிவித்தார்.

கோபி அனானின் கருத்து தவறானதாகும். கூட்டணி படைகளிடையே பிரித்தாளும் சூழ்ச்சியை ஏற்படுத்தினால் பலவிதமான கருத்துக்கள் தோன்றலாம். ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கை சரியான தாகும். மேலும் சர்வதேச சட்டப்படியே அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. என்றும் பேட்டி ஒன்றில் பவெல் தெரிவித்துள்ளார். (ந-7)

# வீடியோ படப்பிடிப்பு தமிழர்

இன்று எமது தமிழ் சமூகத்தினரின் பல்வேறு நிகழ்வுகளிலும் வீடியோப்படப்பிடிப்புக்கு முன்னு

மூலம் படமாக்கி வைத்திருந்தால் விரும்பிய நேரம் பழைய நிகழ்வுகளை மீட்டிப்பார்த்துக் கொள்ளலாம் என்ற மன எண்ணமுமாகும்.

**வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தை பாதிக்கின்றதா? பாதுகாக்கின்றதா? என்ற விவாத அரங்கிற்கு பாதிக்கின்றது என தனது வாதத்தை முன்வைக்கின்றார். நீர்வைமணி**

படங்கள் சமய, தமிழ் பண்பாட்டுக் கலாசாரச் சீரவுகளையே எடுத்துக் காட்டுகின்றன.

ஒரு பொது நிகழ்வில் எடுக்கப்படும் படங்களில் அமைப்பாளர்களுக்கும், வீடியோ உரிமையாளருக்கு வேண்டியவர்க்கும் சிறப்பிடம் தருவதைக் காணலாம்.

அதேபோன்று சமயச் சடங்குகள் பூப்புனித நீராட்டுவிழா, விவாக வைபவங்கள், பொது நிகழ்ச்சிகள் பலவும் வீடியோப் படக்காட்சிக்காகவே வழமைக்குமாறானதும்,

**வாதம் - 5**

சமூக சமய சம்பிரதாயங்கட்கு மாறானதுமான பல ஒழுங்கற்ற முறைகளைக் கையாளுகின்றனர்.

மங்கள விளங்கேற்றும் வைபவங்களில் பிரமுகர்கள் பலரையும் படம் எடுப்பதற்காக மாறி மாறியும் சில நேரங்களில் விளக்குகளை அணைத்து மீண்டும் மீண்டும் வேறு நபர்களைக் கொண்டு ஏற்றுவதுதம் ஒழுங்கற்ற முறையில் தீபங்களை ஏற்றுவதையும் காணலாம். இதேபோன்று பூப்புனித நீராட்டு விழாவில்

என்பவை தமிழர் கலாசாரத்தைச் சீரளிக்கும் செயற்பாடுகளேயாகும்.

மேலும் சுபகாரியங்களில் குறிப்பிட்ட சுபமுகூர்த்தத்தை வீடியோப் படப்பிடிப்பாளர்கள் நின்றால் அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டிய நிலையாகியுள்ளது. மேலும் சமயக் கிரிகைளைக் கட்டுப்படுத்துவதும் சுபகாரியங்கள் நடைபெறும் போதே குறுக்கிட்டுத் தடை செய்வதும் தமக்கு இடைஞ்சல் தருவதாகக் கருதி திருமண மேடையில் மங்கள கரமான மாலை, தோரணம், தீபங்கள், அரசாணி கும்பங்கள் போன்றவற்றைக் கண்டபடி எடுத்துவிடுவதும் இடம் மாற்றுவதும் கலாசார சீரழிவு மட்டுமன்றி இப்படியான தவறான நிலையில் எடுபடும் காட்சிகளைப் பார்க்கும் படித்தோர்கள் பெரியோர்கள் ஏளனம் செய்யும் நிலை ஏற்படுவதும் நாம் காணவும், அறியவும் முடிகின்றது.

ஒழுங்கான நல்ல சமயப் பண்

என்றும் பலருக்கும் பயன்தரும் முயற்சியாயும் எமது கலாச்சார நிகழ்வுகள் செயற்பாடுகளைப் பாதுகாப்பதாகவும் அமையும் ஆனால் உண்மையில் இன்றைய காலப் பல்வேறு நிகழ்வுகளும் வீடியோப்படமாக்கப்படும் போது கலாச்சாரச் சீரழிவுகளையே பெரி

**விவாத அரங்கு -5**

தும் காணக்கூடியதாகவுள்ளது.

வீடியோப்படத்திற்காகப் பெரும் பணத்தையும் நேரத்தையும் செயற்பாடுகளையும் விரையம் செய்யும் மக்கள் நல்ல சிந்தனையுடன் காலம் காலமாகப் பாதுகாத்து, வேண்டும் போது பார்க்கக் கூடியதான எமது சமூதாயப் பண்பாடுகளை எல்லோரும் பெருமைப்படக் கூடியதான ஒழுங்கமைப்புடன் கூடிய முறையிற் படங்களை யெடுத்துப் பேணிப் பாதுகாத்து வைப்பது எல்லோருக்கும் பயன் தரும் முயற்சியாகும்.

# கலாசாரத்தை பாதிக்கின்றது

ரிமை அளிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் வசதியுள்ள குடுபத்தினரும், வெளிநாட்டுத் தொடர்பு உள்ளவர்களுமே வீடியோப் படப்பிடிப்பைச் செய்தார்கள். அதற்குக் காரணம் பணவசதியும், வெளிநாட்டிலுள்ள தங்களுடைய உறவுகள் தமது நிகழ்வுகளைப் பார்க்கவேண்டும் என்ற அவாவுமாயிருந்தது. அத்துடன் வீடியோ


உண்மையில் வீடியோப் படப்பிடிப்பு நன் மனநோக்குடன் எமது கலைப்பண்பாடு, கலாசாரங்களுக்கு இழிவு ஏற்படாதவாறு பிறரும் பார்த்துப் பெருமைப்படும் விதமாக எடுக்கப்படுமாயின் அது வரவேற்கப்படவேண்டியதாகும். ஆனால் இன்று பெருமளவான வைபவங்களில் எடுக்கப்படும் வீடியோப்

புனித மற்ற பல்வேறு செயல்களும் இடம்பெறுவதைக் காணலாம். நீரில் வர்ணங்களைக் கரைத்து விடுவது பண்பாட்டிற்கு ஒவ்வாத முறையில் படங்களை எடுப் பது பிறர் பார்த்துக் கேலி செய்யும் விதமாக கண்டபடி வீடியோக் காட்சிகளை எடுப்பது, சினிமாப் பாணியில் படம் எடுப்பது

பாட்டுக் கலாசார நெறிப்பட்ட நிகழ்வுகளை வீடியோப்படமாக்கி வைத்திருந்தால் அது என்றும் பயனுள்ளதாயமையும். வாழ்க்கையில் மறக்க முடியாத அபூர்வமான பிரமாதமான நல்லனவும் அவசியனவாகக் கருதப்படுபவையும் வீடியோப்படமாக்கப்பட்டால் அது

**நீர்வைமணி**

தேவையறிந்து, பயனறிந்து வீடியோப்படப்பிடிப்பிற்கு ஒழுங்கு செய்து அது மேற்கொள்ளப் பட்டால் எமது கலாசாரத்தை பாதுகாப்பதாக வீடியோப் படப்பிடிப்பு அமையுமென எதிர்பார்க்கலாம்.□




**2004 ஆம் ஆண்டின் உலகமக்கள் தொகை அறிக்கையை என். எப் .பி. ஏ. அமைப்பின் பிரதிநிதி ஹென்ட்ரிக் மற்றும் இந்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் வெளியிட்டனர்.**

## மன்மோகன் அரசியல் சாதனைகளை விளக்க 25 ஆம் திகதி முதல் சைக்கிள் பேரணி

### தமிழ்நாடு காங் - ஜி.கே.வாசன் அறிவிப்பு

(சென்னை)

மத்திய அரசின் சாதனைகளை விளக்கி தமிழ்நாட்டு காங்கிரஸ் சார்பில் செப்ரெம்பர் முதல் அக்டோபர் 6 ஆம் திகதி வரை மாநிலம் முழுக்க சைக்கிள் பேரணி நடத்தப்பட இருக்கிறது என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் இதை கடந்த சனிக்கிழமை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை, அனைத்து மாவட்டங்களிலும் வட்டார, நகர அளவில் இப்பேரணி நடத்தப்படும். சென்னையில் செப்ரெம்பர் 25 இல் நடக்கும் பேரணியில் நான் கலந்து கொள்கிறேன்.

மேலும் தெரிவிக்கையில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வழிகாட்டுதலில், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசு கடந்த '100 நாள்களில் பல சாதனைகளைச் செய்துள்ளது. அவற்றில் தமிழகத்துக்குப் பல திட்டங்கள் கிடைத்துள்ளன.

சமஸ்கிருதம், பாரசீகம், அரபி ஆகிய மொழிகள் மட்டுமே செம்மொழிகளாக இருக்கும் நிலையில் இப்போது தமிழ் மொழியும் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை வரவேற்கிறோம்.

காங்கிரஸ் முயற்சியால் பல முறை தேர்தல் அறிக்கைகள், போட்டிகள் மூலம் இது குறித்து கோரிக்கைகள் விடுத்துள்ளோம்.

தென் தமிழகம் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய வளர்ச்சி பெறக் கூடிய சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ரூ [illegible]00 கோடியில் நிறைவேற்றப்பட்டவுள்ளது.

தீவிரவாதிகளக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட 'பொடா' சட்டம் தமிழகத்தில் அரசியல்வாதிகள் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டதால், ரத்து செய்யப்படவுள்ளது.

நெசவாளர்களின் துயரை நீக்கும் வகையில் கைத்தறி மற்றும் விசைத்தறி மீதான கட்டாய வரி விதிப்பு முறை ஒழிக்கப்பட்டுள்ளது. தமிழக ரயில் திட்டங்களுக்கு நடப்பாண்டில் ரூ324 கோடி ஒதுக்கீடு, பிணை உள்ளிட்ட சாதனைகள் செய்யப்பட்டுள்ளன என்று ஜி.கே.வாசன் தெரிவித்தார். (து)

## தாஜ்மஹால் விழாக் குழுவிற்கு மத்திய அமைச்சர் ராசா நியமனம்

மத்திய அரசின் சார்பாக தாஜ்மஹாலின் 350 வது ஆண்டு சிறப்பு விழாக் குழு உறுப்பினராக மத்திய வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் ஆ. ராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சரின் பெரம்பலூர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்:

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் கட்டப்பட்டு 350 ஆண்டுகள் முடிவு பெறுகிறது. இதை சிறப்பான வகையில் கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான உலகப் பிரசித்திப் பெற்ற தாஜ்மஹாலின் பெருமையை கொண்டாடும் வகையில் இந்திய அரசு 2004 - 2005 ஆம் ஆண்டை உலக தாஜ் ஆண்டாக அறிவித்துள்ளது. இந்த நிகழ்ச்சியின் முதல் நாள் விழா செப்ரெம்பர் 27 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்த விழாவுக்காக மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள விழாக் குழுவில் மத்திய அமைச்சர் ஆ.ராசா உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (து)

## இந்தியச் செய்திகள்

### தி.மு.க— காங் உறவில் மாற்றமில்லை அஜித் ஜோகி தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி வலுவாக உள்ளது என சத்தீஸ்கர் மாநில முன்னாள் முதல்வரும், இப்போது மக்களவை காங்கிரஸ் உறுப்பினருமான அஜீத் ஜோகி தெரிவித்தார்.

சென்னையில் காங்கிரஸ் கட்சித் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் நிருபர்களிடம் அவர் கடந்த சனிக்கிழமை தெரிவிக்கையில்,

காங்கிரஸ் தலைவர் சோனியாவைப் பற்றி இப்போது முதல்வர் ஜெயலலிதா புரிந்து கொண்டுள்ளார். அதனால் தான் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை என்று கூறியுள்ளார்.

ஜெயலலிதா பேட்டியில் கூறியுள்ள கருத்துக்களால் கூட்டணியில் மாற்றம் ஏற்படும் என சொல்ல முடியாது. கூட்டணி பற்றி கட்சித் தலைமைதான் முடிவு செய்யும். அதுவும் தேர்தல் நேரத்தில்தான் அது பற்றி விவாதிக்கப்படும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் தி.மு.கவுடனான கூட்டணி வலுவாக உள்ளது. இதில் எந்த மாற்றமும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றார் ஜோகி. (து)



**கடந்த சனிக்கிழமை விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலைகள் அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்றன. மண்ணால் செய்யப்பட்ட விநாயகருக்கு வர்ணம் பூசி அழகூட்டும் கலைக்குடும்பம்.**

## இன்று ஒரு தகவல்

# மூன்று பிச்சைக்காரர்கள்

ஒரு ஊரில்ஒரு பெரியவர்இருந்தார் அவ் ஒரு கோடீஸ் வரர். நிறைய நல்ல காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருந்தார். அவரைத் தேடி நிறையப பேர் வரு வார்கள இவரால முடிந்த உதவியைச் செய்வார்.

ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். ஏதாவது பொருள் உதவி பெறலாம் என்று நினைத்து மூன்று பேரும் தனித்தனியாக வந்தார்கள். முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். "ஐயா எனக்கு ஐந்து ரூபா வேண்டும். தயவுசெய்து கொடுங்கள்" என்று கேட்டான். இதைக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன இது நான் ஏதோ உனிடம் கடன்பட்டிருப்பது போலவும் அதைததிருப பிக் கொடுங்கள் என்று கேட்பது போலவும் கேட்கிறாய்? எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாவெல்லாம் தர முடியாது இந்தா இரண்டு ரூபா! எடுத்துக் கொண்டு ஓடு" என்று கூறி இரணடு ரூபாவைத் தூக்கியெறிந்தா. அவன் அதை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டான்.

அடுத்ததாக மத்தியான வேளையில் ஒரு பிச்சைக் காரன் வந்தான்.இவன் எப்படிக்கேட்டான் தெரியுமா? "ஐயா... பத்து நாட்களாக ஒருவேளை உணவு கூட சாப்பிடவில்லை தயவுசெய்து உதவுங்கள்" என்றான். "உனக்கு எவவளவு வேண்டும்? என்று கேட்டார் இவர். "நீங்களாகப பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப போதும்" என்றான். "இந்தா பத்து ரூபா இதை வைத்துக கொள் ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார். அவனும் அந்தப் பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

அதன் பின்பு பின்னேரம் போல மூன்றாவதாக வந்த பிச்சைக்காரன் கேட்ட விதம் என்ன தெரியுமா? மகாராஜா உங்களுடைய உயர்ந்த குணததைப் பற்றி நான நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். "அறவழியில் வாழ்ந்து கொணடிருக்கும் நீங்கள் தான் கண்கண்ட தெய்வம்" என்றான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "தயவு செய்து உட்காருங்கள் நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீகள். முதலில் சாப்பிடுங்கள் மற்றதை பின்னர் பார்க்கலாம்" என்று கூறி அவனை உட்கார வைத்து சாப்பாடு கொடுத்தார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். அதன் பின் இவர் கேட்டார். இப்போது சொல்லுங்கள் நான் என்ன செய்ய வேண்டும் உங்களுக்கு? என்று கேடடார். அந்தப் பிச்சைக் காரன் இந்த அனபுக்கு நெகிழ்ந்து " ஐயா...பசியோடு வந்தேன் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள் அது போதும் எனக்கு வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என்மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்க மாட்டேன் உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும் உங்களுக்கு ஒரு குறையும் வராது" என்றான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனைதத் தொட்டது.அவன் மீது இருந்த அன்பு பன் மடங்கு அதிகமானது. அதன் விளைவு என்ன தெரியுமா? "இதே பாரப்பா- நீ இனி மேல வெளியே எங்கும் போக வேண்டாம் இங்கேயே இருந்துவிடு" என்றார். தன்னுடைய பங்களாவுக்குப் பக்கத்திலேயே அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்து கடைசிவரை அந்த ஆளைத தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையை சுவாமி சிவானந்தர் சொலலியிருக்கிறார். இறைவன் அந்தக் கோடீஸ்வரர் மாதிரியாம். அந்த மூன்று வகைப் பிசசைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம். இன்றைக்கு உள்ள பக்தர்கள் எல்லாம் இந்த மூன்று வகையில் ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். முதல் வகைதான அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

நமது ஊர்ப்பக்கம் ஒரு பெரியவர் இருந்தார். இவா செலவு செய்யப் பயப்படுவார். ஒரு பைசா ஒருவருக்குக் கொடுப்பதென்றாலும் மிகவும் யோசிப்பார். இவரைத் தேடி ஒருநாள் சில பிச்சைக்காரர்கள் வந்தார்கள்."ஐயா நாங்கள் எல்லோரும் சேர்ந்து பிச்சைக்காரர் சங்கம் ஆரம்பிக்கிறோம். அதற்கு நீங்கள் ஒரு ஆயிரம ரூபா நிதியுதவி செய்யுங்கள்" என்று கேட்டனர்.

"அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது. அவ்வளவு பணமெல்லாம் என்னிடம் கிடையாது என்றார் இவர். "சரி ஒரு நூறு ரூபாவாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் முடியாது" என்றார்." பத்துக்காசாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் என்னிடம் கிடையாது" என்றார் அந்தப பெரிய மனிதர். " சரி அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்" என்றனர்." என்ன செய்ய வேண்டும்? " என்றனர். " நீங்களும் எங்கள சங்கத்தில் ஒரு அங்கத்தவராக இணைந்துவிடுங்கள்" என்றனர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சட்டத்துறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நீக்க புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டின் நீதித்துறையைப் பற்றி பொதுமக்கள் மத்தியில் வெறுப்பும் அதிருப்தியுமே நிலவுகின்றன.

நீதிமன்றங்களுக்கு விசாரணைக்காக வரும் வழக்குகள் காலவரையின்றி பல வருடங்களுக்கு இழுத்தடிக்கப்படுவதே இதற்கு காரணமென நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மாத்தளையை அடுத்துள்ள பாலபத்வெல நகரில் 39 ஆவது தொழில் நீதிமன்றத்தை அண்மையில் திறந்து வைதது்ப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

பாசிபடிந்த பல சட்டங்கள் இப்போது நடைமுறையில் இருக்கின்றன. இதனால் அவற்றைத் தூக்கியெறிந்து விட்டு இன்றைய நவீன உலகத்துக்குப் பொருத்தமான சட்டங்களை உருவாக்குவது அவசியமாகும்.

சட்டம் நீதி தொடர்பான சகல அம்சங்களிலும் காலத்துக்கு ஏற்றவாறான பாரிய மாற்றங்கள் பல செய்யப்பட வேண்டும்.

சட்டத்துறையில் உள்ள சகல குறைப்பாடுகளும் நிவிர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நான் தற்போது செய்து வருகின்றேன்.

நீதிமன்றங்களில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் குறித்து பொதுமக்கள் நாளாந்தம் எனக்கு எழுத்து மூலமாக பல முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றார்கள்.

ஆனால் நீதிமன்றங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் மக்கள் தெரிவித்துள்ள முறைப்பாட்டினை நாம் விரிவாக ஆராய்ந்து அவர்கள் கூறும் குறைபாடு என்ன? அந்தக் குறைபாட்டிற்கான காரணம் என்ன? என்பதை கண்டறிய வேண்டும்.

முறையான நீதிச்சேவை நாட்டில் நடைபெறுகின்றது என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

இதேசமயம் நீதிமன்றங்களுக்கு விசாரணைக்காக வரும் வழக்குகள் வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்படுவதற்கு இரசாயனப் பகுவாய்வுத் திணைக்ளத்தில் நிலவும் குறைபாடுகளும் ஒரு முக்கிய காரணமாகும்.

அண்மையில் நான் இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு விஜயம் செய்த போது 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகள் பூரணப்படுத்தப்படாமல் தேங்கிக் கிடந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பகுப்பாய்வுக்காக வந்த லட்சக்கணக்கான சாராயப் போத்தல்கள் அங்கு குவிந்து கிடந்தன. ஆளணிப்பற்றாக் குறை காரணமாக பகுப்பாய்வு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள முடியாதிருப்பதாக அங்குள்ள அதிகாரிகள் என்னிடம தெரிவித்தார்கள்.

இந்நிலையை மாற்றி அமைக்கும் பொருட்டு பகுப்பாய்வுக்கான கிளை நிலையங்களை மாவட்ட ரீதியாக அமைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நதிமன்றத்துக்கு வரும் வழக்குகளை உடனுக்குடன் விசாரணை செய்ய இத்திட்டம் பெரும் உதவியாக இருக்கும் என நான் நம்புகின்றேன் என்றார். (க)

# மாணவர்கள் கணனி அறிவை பெற்றுக்கொள்வது இன்றியமையாதது

## வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

(மருதங்கேணி)

உலகமயமாக்கலுக்கு ஏற்ப ஏமதை நாம் தயார் செய்ய வேண்டும். இன்று உலகம் கணனி மயமாகிவிட்டது அது இன்று அத்தியாவசியமானதொன்றாகிவிட்டது.

இவ்வாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.கி.செல்வரத்தினம் தெரிவித்தா.

உடுத்துறை மகாவித்தியாலய பழைய மாணவரான எஸ்.செல்லையா 10கணனிகளை மேற்படி வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்யும் வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் அ.ச.அரியகுமார் தலைமையில் நடைபெறற இவ்விழாவில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உயர்தர வகுப்பில் தகவல்தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணனி அறிவு இல்லாமல் எவரும் இருக்க முடியாது. மாணவர்கள் இவ் அறிவைப் பெறுவதற்காக பழைய மாணவர்கள் புதிதாக கணனிகளைக் கொள்வனவு செய்து வழங்க முன்வந்தமை பாராட்டத்தக்கதொன்றாகும் என்றார்.

அடுத்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் பேசுகையில்,

புதிதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபராகக் கடமையேற்ற பின்னர் நான் பங்குகொண்ட முதலாவது பொது வைபவம் இதுவாகும். கல்விசார்ந்த ஒரு வைபவத்தில் கலந்துகொள்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எதிர்காலத்தில் கல்வித்துறை சார்ந்த அபிவிருததித திட்டங்களுக்கு என்னால் இயன்ற ஒத்துழைப்பினை வழங்கி இப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவேன்.இப் பிரதேசத்தில் முதன்முதலாக இப்பாடசாலை கணனி வசதிகளைப் பெற்றிருக்கிறது இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும் என்றார். (ற-35)

## இராசி பலன்

**20.09.2004 (புரட்டாதி 04திங்கட்கிழமை)**

**ஷஷ்டி பி.ப 12.54 மணி வரை**

**அனுஷம் மரணம் பி.ப 3.09 மணிவரை**

**இராகு காலம் 7.32-9.02 மணிவரை**

**சுப நேரம் 12.32 - 1.32 மணிவரை**

**மேடம்**
பிரயாணம் பயம், காரியதடை, ரோக நிலை, போசன சுகம்.

**இடபம்**
சௌக்கியவிருத்தி, போசன சுகம், வாகனசுகம், முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
ஜனவசியம், தொழில்விருத்தி, காரிய அனுகூலம், தனவரவு.

**கடகம்**
வியாபார விருத்தி, சிறுவியாதி, தொழில் மந்தம், குடும்பசுகம்.

**சிங்கம்**
உடல் நலக்குறைவு, மனச்சோர்வு, காரிய தடை மாதாசுகம்.

**கன்னி**
நல்லமுயற்சி, தொழில் நன்மை, தனஇலாபம், வாக்கு மேன்மை.

**துலாம்**
அதிகாரம், காரிய தாமதம், வீண் வார்த்தை, தனவிரயம்.

**விருச்சிகம்**
தொழில் நன்மை, கல்வியில் ஆர்வம், முயற்சி கைகூடும் போசனசுகம்.

**தனுசு**
காரியஅலைச்சல், சயனசுகக்குறைவு, உறவினர் வெறுப்பு, தனஇலாபம்.

**மகரம்**
நல்ல காரியம், பொருள் சேர்க்கை, உறவினர் சந்திப்பு, பெருமை.

**கும்பம்**
மேன்மை, தொழில் முன்னேற்றம், புதிய விடயம் முயற்சி, பலிதம்.

**மீனம்**
தொழில்சிந்தை, பிரயாணம், காரிய தாமதம், மனக்கவலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## இடம்பெயர்ந்தோரைக் குடியமர்த்த 240 கோடி ரூபாவை அரசு செலவிடும்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கென. அரசாங்கம் 240கோடி ரூபாவை செலவிடவுள்ளதாக நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது, ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஐரோப்பிய ஒன்றியமும இந்தத் தொகையில் அரைவாசியை ஏற்கனவே எம்மிடம் வழங்கியுள்ளன.

இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பமும் மீண்டும் சுமுகமான வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கென தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. அத்துடன் மக்களுக்கு குறிப்பாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு உலர் உணவு நிவாரணமும் வழங்கப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளைப புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதியுதவிகளை உலக வங்கி, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் என்பன வழங்க முன்வந்துள்ளதால் விரைவில் அவர்களின் வீடுகளை புனரமைப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளது. (க-61)

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிாவரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போயா நிகழ்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீதனததுடன் ஆரம்பாமாகி நணபகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அன்று கலாநிதி ச.கா.சண்முகநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ற)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**தமிழ்மொழியும் இலக்கியமும் I**

**நேரம் - 1 மணித்தியாலம்**

ஆக்கம் :
*திருமதி க. முத்துக்கிருஷ்ணன்*
*(யா/செங்குந்த இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்)*

**எல்ல வினாக்களுக்கும் விடை' தருக?**

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(ஐ) முயற்சி உடையார் இகழ்ச்சியடையார் என்பது கண்கூடும். கண்கூடு என்பதன் ஒத்த சொல்.
1.உண்மை 2. வெளிப்படை 3. நிச்சயம் 4. இயற்கை

(02) சபையறிந்து விளம்பல் உத்தமம் இங்கு விளம்பல் என்பது
1. பிரேரித்தல் 2. நடித்தல் 3. கொடுத்தல் 4. பேசுதல்

(03) இன்று மகளிர் சுயாதீனம் பெற்று விளங்குகின்றனர்; சுயாதீனம் என்பதன் எதிர்ச்சொல்.
1. பலவீனம் 2. சுதந்திரம் 3. முன்னணி 4. பாராதீனம்

(04) பிழையான தகவல்கள் நிராகரிக்கப்பட்டன. நிராகரித்தல் என்பதன் எதிர்ச்சொல்
1. அமுலாக்கல்2. பகிஷ்கரிதல் 3.அங்கீகரித்தல் 4. சேகரித்தல்

(05) உண்மையை உறுதிப்படுத்தாமல் ஊர் மக்கள் பரப்பும் சந்தேகத்திற்குள்ளான செய்தி
1. பொய்யுரை 2. புகார் 3. வதந்தி 4. புதினம்

(06) எண்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1.பொன்விழா 2. அமுதவிழா 3. வெள்ளிவிழா 4. வைர விழா

(07) அட்சரம் என்ற வட சொல் குறிப்பது
1. எழுத்து 2. சொல் 3. செப்பும் 4. மாலை

(08) பிற்காலத்தேவைக்காக சேமித்துவைக்கப்படும் பொருள்
1. மானியம் 2. காப்புறுதி 3. நிதியம் 4. எப்பில்வைப்பு

(09) இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும். பொதுவாய் அமைவது
1. நண்டு 2. தண்டு 3. உண்டு 4. குண்டு

(10) பண்புத்தொகையாய் அமைவது
1. பூங்குயில் 2. கருவகுயில் 3. மாங்குயில் 4. சோகக்குயில்

(11) இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு அமைச்சர்கள் பலர் இடித்துரைத்தனர். இடித்துரைத்தல் என்ற மரபுத் தொடரின் கருத்து
1. வற்புறுத்திக்கூறல் 2. கோபித்துக்கூறல்
3. எடுத்துக்கூறல் 4. அடித்துக்கூறல்

(12) நகமும் சதையும் போல என்ற உவமைத் தொடருக்கு ஒப்பான உவமைத்தொடர்.
1. நீர்மேல் எழுத்துப்போல 2. கார்த்திகைப்பிறை கண்டது போல
3. பூவும் மணமும் போல 4. புறக்குடத்தில் வார்த்த நீர் போல

(13) மற்றவருக்கு உபதேசம் செய்யும் ஒருவன், தான் மட்டும் வாழும் வகை தெரியாது கெடுவதை உணர்த்தும் பழமொழி.
1. கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் அவயக்குரல்
2. கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளால் தெரியும்
3. ஊருக்கு சாத்திரம் சொல்லும் பல்லி கூழ்பானையில் விழுந்தது.
4. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது

(14) துள்ளிய மாடு பொதிசுமக்கும் என்னும் பழமொழியின் கருத்து
1. துள்ளித்திரிகிற மாட்டை அடக்கி வைக்கலாம்
2. மாட்டின் தொழில் பொதி சுமத்தல்
3. அடக்கமாக இருந்தால் மாட்டிற்கு அழகு
4. அடங்காமல் இருந்தால் கஷ்டப்படவேண்டி வரும்

(15) வென்றவனை வென்றான்.இதில் வென்றவன் என்பது
1. தொழிற்பெயர் 2.குணப்பெயர்
3. வினையால் அணையும் பெயர் 4. குறிப்பு வினை

(16) ஒரு செய்யுளில் சீர்கள் தோறும் முதல் எழுத்து ஒன்றித்து வருதல
1. மோனை 2. எதுகை 3. யாப்பு 4. உவமை

(17) விரிசோதி என்பது
1. வேற்றுமைத்தொகை 2. உவமைத் தொகை
3. வினைத்தொகை 4. பண்புத்தொகை

(18) அரசனுக்குரியது மணி முடி இதில் கு உருபு உணர்த்தும் பொருள்
1. கோடற்பொருள் 2. நட்புபொருள்
3. வகைத் தொடர் 4. தகுதிப்பொருள்

(19) கண்ணிரண்டும் சிவந்தது.இவ்வாக்கியத்தில் கண்வரும் வழுவஅமைதி
1. திணை 2. எண் 3. இடம் 4. பால்

(20) உயிர்த்தொடர் குற்றியலுகரமாய் அமைந்த சொல்
1. பயறு 2. ஆடு 3. புற்று 4. கொக்கு

(21) உலக நடையறிந்து ஒழுகுதல்
1. மரபு 2. சால்பு 3. ஒப்புரவு 4. பூட்கை

(22) ஒருவர் பிறந்து இறக்கும் வரை உள்ள காலம்
1. கலியுகம் 2. தலைமுறை 3. நூற்றாண்டு 4. ஜன்மம்

(23) குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்தோருக்குரிய அறிவுறுத்தல்களையும் செயல் முறைகளையும் விளக்கிக்கூறும் நூல்
1. கைநூல் 2. வர்த்தமானி 3. துணை நூல் 4. வழிநூல்

(24) மிளகாயின் வித்தை விதை என்பது போல, ஆமணக்கின் வித்து
1. கொட்டை 2. வித்து 3.பருப்பு 4. முத்து

(25) நெல், சோளம் என்பவற்றின் மணித்தொகுதி
1.கொத்து 2. குலை 3. கதிர் 4.தாறு

(26) இயல்புப் புணர்ச்சிக்கு உதாரணமாக வருவது
1. நாட்டுப்பற்று 2.கடல்நீர் 3. கடற்கரை 4. மரவேர்

(27) கண்டான் என்பதன் பகுதியாக அமைவது
1. கண் 2. காண் 3. கண்ட 4.கா

(28) சுட்ட மண்ணும், பச்சை மண்ணும் ஒட்டுமா? இங்கு சுட்டமண் என்பது
1.பெயரெச்சம் 2. வினை முற்று 3. முற்றெச்சம் 4. வினையெச்சம்

(29) பின்வருவனவற்றுள் இடை நிலை பெற்று வராத சொல்
1.வாழ்க 2.உண்டான் 3.ஓடினான் 4.அறிஞன்

(30) அலுமாரி என்பது தமிழில் வழங்கும்
1. இயற்சொல் 2. திரிசொல் 3. வடசொல் 4. திசைச்சொல்

(31) போட்டியும், பொறாமையும் மனித முன்னேற்றத்திற்கு
1. ஏற்றனவல்ல 2. ஏற்றவன்று 3. ஏற்றதன்று 4.ஏற்றதல்ல

(32) அவன் படிப்பில் மட்டுமன்றி
1. விளையாட்டிலே சிறந்தவன் 2. விளையாட்டிலும் சிறந்தவன்
3. விளையாட்டிலன்றோ சிறந்தவன் 4. விளையாடச் சிறந்தவன்

(33) அக்கடையில் உள்ள ஒவ்வொரு
1. பழமும் நல்லது 2. பழங்களும் நல்லன
3. பழங்களும் நல்லது 4. பழமும் நல்லன

(34) பண்டிதமணியின் "கம்பராமாயணக் காட்சிகள்" போன்ற கட்டுரைகள்
1. இராமாயணத்தை விட சுவையால் நுகரத்தக்கன
2. இராமாயணத்தில் கண்ட சுவையை நுகர்வன
3. இராமாயணத்தினால் கண்ட சுவையை நுகர்வன
4. இராமாயணத்தில் அவர் கண்ட சுவையை நுகர்வன

(35) நீஅழைத்ததற்காக வேண்டுமானால்
1. வந்தே 2. வருகிறேன் 3. வரவில்லை 4. வந்தேன் அல்லேன்

(36) **பின்வரும் பாடலைப் படித்து விடை தருக?**

**வந்து கொல்லும் மின்னல் போன்ற**
**வாழ்வை நம்பிடேன் கண்ணே**
**இந்து போல தேயும் உலகில்**
**இன்பம் வேண்டிலேன்**

இப்பாடலில் வலியுறுத்தப்படும் கருத்து
1. இயற்கைக்காட்சி 2. வாழ்க்கைநெறி
3. வாழ்வில் நிலையாமை 4. பக்தி நெறி

(37) இந்து என்பதன் பொருள்
1. சந்திரன் 2.செல்வம் 3. சூரியன் 4.சமுத்திரம்

(38) ஆசிரியர் கருத்தை எடுத்துக்கூறும் விதம்
1. சீமத்தின் மூலம் 2. நியாயத்தின் மூலம்
3. உலேகாயுதத்தின்மூலம் 4.உவமை மூலம்

(39) இன்பம் எப்படிப்பட்டது எனப்படுகிறது
1. நிலையானது 2. போலியானது
3. சொல்லமுடியாதது 4. நிலைமாறக்கூடியது

(40) பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க
1. ஆகவே வாழ்க்கை வளம் சிறந்ததாக அமையவேண்டும் எனில் தொழிலிலும் அவசியம்.
2. வாழ்க்கைக்கு முயற்சி கட்டாயம்
3. பொதுவாக உடல் முயற்சியையும், தொழில் என்னும் அறிவு முயற்சியையும் கலை என்று குறிப்பிடுவர்
4. முயற்சியில் இரண்டு வகையுண்டு
(1) உடல் முயற்சி மற்றது அறிவு முயற்சி
5.உடல் நலத்தைப் பேணுவதற்கு தொழில்கள் இன்றியமையாதது எனின் உளச் செழுமையைப் பேணுவதற் கலையின்றியமையாதது
1. ஈ, ஆ, அ, இ, உ 2. ஆ, ஈ, இ, உ, அ
3. ஆ, இ, ஈ, உ, அ 4. ஈ, இ,உ,அ, ஆ

*(40x 1 = 40* புள்ளிகள்)

## சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி I இன் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. (3) | 02. (2) | 03. (3) | 04. (2) | 05. (4) |
| 06. (3) | 07: (1) | 08. (4) | 09. (1) | 10. (3) |
| 11. (1) | 12. (2) | 13. (3) | 14. (3) | 15. (2) |
| 16. (3) | 17. (1) | 18. (2) | 19. (3) | 20. (2) |
| 21. (3) | 22. (2) | 23. (3) | 24. (2) | 25. (3) |
| 26. (4) | 27. (2) | 28. (3) | 29. (4) | 30. (3) |
| 31. (4) | 32. (2) | 33. (1) | 34. (4) | 35. (2) |
| 36. (1) | 37. (2) | 38. (1) | 39. (4) | 40. (2) |

**திங்கட்கிழமை தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி -I இற்கான விடையுடன், பகுதி -II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

## விவாத அரங்கு -5

**விடயம்**

**வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது. பாதுகாக்கின்றது.**

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள**


*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.




யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற 'பனைச் செல்வம' நூல் வெளியட்டு விழாவில் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவதையும், பாராளுமனற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா , ஈழவேந்தன், சிவனேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், முதற் பிரதியை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து வட மாகாண பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் இ.தவராசா பெற்றுக்கொள்வதையும, வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படம்:-சிவசங்கர்.



# அரசின் மாற்று யோசனைகள் தமிழரால் ஏற்றுக்கொள்ள முடியாதவை

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்



னாட்சி அதிகார சபை நகலின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசு அதனை நிராகரிக்க முடியாது. அரசினால் தயாரிக்கப்படும் திட்டத்தை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவர்ம் தொடரபாக கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுவிடயம் குறிதது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், அடக்குபவர்கள்தான் விட்டுக்கொடுப்பை செய்யலாம். அடக்கப்படுபவர்கள் விட்டுக் கொடுப்பை எப்படி செய்ய முடியும். இனியும் தமிழர்கள் அடங்கப்போக முடியாது என்றும் கூறிய அவர் மேலும் கூறியதாவது:

**அரசியல் கண்துடைப்பு**

அரசின் மாற்றுத்திட்டம் என்பது சமாதான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது. பிரமையினை உலகிற்கு காட்டுவதற்கும், அரசியல்வாதிகள் சுகபோக வாழ்க்கையினை தொடர்ந்து வாழ்வதற்கு அரச இயந்திரத்தை இயக்குவதற்கான ஒரு கண்துடைப்பு அரசியல் தந்திரமே.

தமிழரின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்காது விட்டால் தொடர்ந்தும் சமாதானப் பயணத்தில் தடை ஏற்படும். இது ஆபத்தானது, பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும். யுத்தம் ஆரம்பிப்பதற்கே சாதகமாகும்.

**குழப்பியடிக்கும் ஜே.வி.பி.**

தென இலங்கையில் ஜே.வி.பி. போன்றோரைத் தவிர 98 வீதமான மக்கள் தமிழருக்கு உரிமைகளை வழங்குவதன் மூலமே சமாதானத்தை அடைய முடியும் என்பதில் தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதுடன் அந்த வழியினையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு வீதமானவர்கள் மட்டும்தான் தமிழரின் உரிமைகளை மறுத்து தமிழரின் தேசியப் போராடடத்தை அழிப்பதன் மூலம் சமாதானத்தை அடைய முடியும் என தப்புக்கணக்கு போடுகிறார்கள்.

**யதார்த்தம்**

பெரும்பான்மையான மக்கள் யதார்த்தத்தை புரிந்து விட்டார்கள். சிங்கள மதபீடங்களின் தலைவர்களை நான் சந்தித்த போது அவர்களும் சமாதானத்தையே விரும்புவதாகத் தெரிவித்தனர்.

அரசியல்வாதிகள் மட்டும் தமது அரசியல் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டு கட்சிக்காக நாட்டு மக்கள் நலன்களை மறந்து செயற படுகின்றார்கள்.

தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்வதையும் சமாதான வழிமுறையில் ஐக்கியத்திற்கான பாதையில் செல்கையில் ஜே.வி.பி.யும் சில பௌத்த சிங்கள பேரினவாதிகளும் சிங்கள மக்களை திசை திருப்பி தீய வழிக்கு இட்டுச செல்கின்றார்கள். கடந்த கால யதார்த்தங்களையும் வரலாறுகளையும் கற்றுக் கொள்ளாதவர்களே கடும் போக்கை கடைப்பிடிக்கின்ற சிங்கள இன வெறியர்கள் இவர்களின் செயற்பாடு இலங்கைத் தீவை பாதாளத்துக்குள் தள்ளும்.

இவ்வாறானவர்களால் மக்கள் விமோசனம் அடைய முடியாது.

சிங்கள தேசிய வாதிகள் இலங்கை 'பல்தேசியம்' கொண்ட நாடு, பல மதம், பல கலாசாரம் கொண்ட நாடு என்பதையும் இனப்பிரச்சினை ஒரு தேசியப்பிரச்சினை என்ற அரசியல் அடிப்பனீட யதார்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**சமாதானப் பயணத்தில் முட்டுக்கட்டை**

இலங்கைத்தீவு ஒற்றையாட்சிகுரிய நாடு அல்ல என்பதனை தென் இலங்கை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிங்கள மக்கள் அனுபவிக்கும் சுதந்திர்த்தையும் உரிமையையும் தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும். அதனை தடுப்பது தமிழரின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல்.

தென் இலங்கை அரசியல் வர்திகள் இதய சுத்தியுடன உண்மையாகவும் நீதியாகவும் பேச்சுக்களுக்கு வரவேண்டும். உண்மையும் நீதியும் இன்றி சமாதானம் அகிம்சை என்று கூறுவதில் அர்ததமில்லை. தமிழரின் உரிமைகளை மறுத்து சமாதானப் பயணம் செல்ல முடியாது. தமிழர் தரப்பு தன்னாலான விட்டுக்கொடுப்புக்களை எல்லாம் செய்து விட்டது. இனியும் விட்டுக் கொடுப்பதற்கு எதுவும் இல்லை.

சிங்களத் தரப்பு எவ்வளவு உச்சக்கட்டமாக தமிழ்களை அடக்கி ஆளலாம் என்றுதான் சிந்திக்கின்றார்களே தவிர தமிழர்களுக்கு முடிந்தளவு உரிமைகளை வழங்குவது குறித்து ஒருபோதும் சிந்திப்பதில்லை.

**சுய அரசியலுக்கான காலம்**

அடக்குபவர்கள் தான் விட்டுக் கொடுப்பை செய்யலாம் அடக்கப் படுபவர்கள் விட்டுக்கொடுப்பை எப்படிச் செய்யமுடியும். இனியும் தமிழர்கள் அடங்கிப்போக முடியாது.

அரசு சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேசத்திடம் பணம் பெற்றுக் கொண்டு அர்த்தமற்ற சமாதானம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழரின் உரிமைகளை வழங்குவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். சுய அரசியல் நடத்தும் காலம் இது அல்ல எனக் குறிப்பிட்டார். (ந)

## மாத்தறை நீதிமன்றிலிருந்து வெடிகுண்டு மீட்பு

(மாத்தறை)

மாத்தறை மாவட்ட நீதிமன்றத்துக்குளளிருந்து வெடிகுண்டு ஒன்றை ஸ்ரீலங்காப் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

நீதிமன்றத்துக்குள் வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, நீதிமன்றத்தினுள் வெடிகுண்டு ஒன்று மறைத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அனாமதேய தொலைபேசித் தகவலையடுத்து மேற்கொண்ட தேடுதலின் போது இக் குண்டு மீட்கப்பட்டது பின்னர் இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் அது செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதையடுத்து அங்கு நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகக்கென அழைத்து வரப்பட்ட 28சிறைக் கைதிகளுக்கும் சந்தேக நபர்களுககும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-08)

## சீரடி பாபாவின் பிறந்ததினம

பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சீரடி பாபாவின் பிறந்தநாள விழா ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

அத்துடன், எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 27ஆம் திகதிவரை தினசரி காலை 8.30மணி தொடக்கம் சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிக்கப்படும். (ந)

## பட்டப்பகலில் ஓடுபிரித்து திருட்டு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் பொன்னப்பா ஒழுங்கையிலுள்ள வீடொன்றில் நண்பகல்வேளையில் ஓடுபிரித்து உட்சென்று நகை, பணம் என்பன திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் இடம்பெற்ற சமயம் வீட்டுக்காரர் கோயிலுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-47)



இல: 161A, கே.கே.எஸ்.வீதி, (சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்.
T.P:021 222 2219

**வட. இ. ச. சபை, பரீட்சைகள் 2005**

வ.இ.ச.சபையின் 2005ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் 2004.0[illegible]0முதல் விற்பனைக்கு வரும்.விண்ணப்ப முடிவுத்திகதி 2004.12.01விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது. (30/-) மட்டும்

விண்ணப்பப்படிவத்தைத் தபால்மூலம் பெற விரும்புவோர் ரூபா 30/-பெறுமதியான காசுக்கட்டளையை (மணி ஓடர்) உடன் ரூபா 4.50/- பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ., 22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
வட.இலங்கைச் சங்கீத சபை,
யாழ்.கல்வி வலயம்,
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம் எனும் இடத்தில்
பெற்றுக்கொள்ளவும்.

(C/529)

# தமிழீழ காவல்துறை சட்டம், ஒழுங்குடன் மக்களின் வாழ்வியலையும் முன்னேற்றும்

**குறுகிய காலத்தில் தமிழீழ காவல்துறை மிகச் சிறந்த வளர்ச்சியை அடைவதற்கான அடிப்படைக் காரணம் விடுதலைப் போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தக் கட்டமைப்பு உருவாக்கப் பட்டதுடன், எமது தனித்துவமான தலைமைத்துவத்தின் வழிகாட்டலுமேயாகும்.**

**தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ஜி.நடேசன் எமது செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

**அவரது செவ்வியின் விபரம் வருமாறு:-**



**கேள்வி :- தமிழீழ காவல்துறையின் செயற்பாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் எவ்வாறு உள்ளது?**

**பதில்:-** புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்பும் ஒவ்வொரு துறையும் வேகமான வளர்ச்சியைக் கண்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஒரு வித்தியாசமான சூழலில் சேவை செய்து கொண்டு இருக்கிறோம். எமது காவல்துறையின் வளர்ச்சிக்கு தற்போது நிறையச் சந்தர்ப்பங்களும் சூழலும் உருவாகியுள்ளன. ஆனால் குற்றச் செயல்களை பொறுத்தவரை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்பும் இப்போதும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. திட்டமிடப்பட்ட பாரிய குற்றச் செயல்கள் நடப்பதில்லை. எமது பகுதிக்குள் சிறிய குற்றச் செயல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. ஆனால் ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின்பு

> **மனித உரிமைகளை மதித்துச் செயற்படும் எமது கட்டமைப்புப பற்றி சர்வதேச மனிதஉரிமை அமைப்புகள் ஏனைய நாடுகளில் எடுத்துக் கூறுவதுடன் இக்கட்டமைப்பை உதாரணம் காட்டுவதும் பெருமைக்குரிய விடயமாகும்.**

போக்குவரத்து வாகனங்களின் தொகை அதிகரித்துள்ளது. வீதிகள் குன்றும் குழியுமாகவுள்ளன. போக்குவரத்திற்கு ஏற்றமாதிரி இன்னும் பாதைகள் அமையவில்லை. பெரிய சண்டைகளைக் கண்டு 20 வருட யுத்தச் சூழலில் பழக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளிற்கு மத்தியில் வாழ்ந்த மக்கள் தற்போது புதிய வாகனங்கள் வாங்குகிறார்கள். இதேபோன்று தென் பகுதியில் இருந்தும் வாகனங்கள் எமது பகுதிக்குள் பெருமளவில் வருகின்றன. இதற்கான வீதி ஒழுங்கு முறை எமக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. நாங்கள் அதை ஒரு சவாலாக எடுத்து செயற்படுகிறோம். குற்றச செயல்கள் இங்கு எப்படிக் குறைவாகவுள்ளதோ அதேபோன்று வீதி விபத்துக்களையும் தடுக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எமது தேசியத் தலைவரின் ஆலோசனைக்கு ஏற்ப எமது மக்களுடன் சேர்ந்து விழிப்பூட்டல்களை மேற்கொண்டு விபத்துக்களைத தடுத்து வருகிறோம். இத்துடன் வீதி ஒழுங்கு முறை பற்றிய கருத்தூட்டல்களையும் பரவலாக மேற்கொண்டு

நேர்காணல்:-
**வே.தவச்செல்வம்**

வருகிறோம். எனினும் தென்பகுதியில் இருந்து வரும் வாகனங்களால் ஒரு சில விபத்துக்கள் நடந்துள்ளன. ஆனால் தற்போது தென்பகுதியில் இருந்து வரும் வாகனங்களும் வேகக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றன. இதைவிட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் யு.என்.எச்.சி.ஆர்., யுனிசெவ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்கள் எங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றன. மனித உரிமைகள் தெடர்பான கருத்துக்களை அவர்களுடன் மனம் திறந்து பகிர்ந்து வருகிறோம். சில ஆபிரிக்க நாடுகள் வேறு நாடுகளில் கூட அந்நிறுவனங்கள் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களை, கல்விச் செயற்பாடுகளை இங்கு வித்தியாசமான நிலைமை முன்னெடுத்து வருகின்றன. ஏனெனில் எங்களுடைய போராட்டம் மனித உரிமைகளையும் உள்ளடக்கியதாகும். இங்கு வருகின்ற சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்குக் கூட எமது கட்டமைப்பின் ஒவ்வொரு படிநிலைகளையும் காட்டி விளக்கி வருகின்றோம். இதனால், இவ்வமைப்புக்கள் வேறு நாடுகளில் நடாத்தும் கருத்தரங்குகளில் எம்மை உதாரணம் காட்டுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

**கேள்வி :- குறுகிய காலத்தில் நீங்கள் பெருமளவில் வளர்ச்சியடைந்தமைக்கான காரணம் என்ன? உங்களால் எப்படி இவ்வாறு வளர்ச்சியடைய முடிந்தது.**

**பதில்:-** விடுதலைப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தக் கட்டமைப்பை நாங்கள் உருவாக்கியமைதான் எமது வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம் (இதைவிட முக்கியமானது எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தனித்துவமான தலைமைத்துவம் காவல்துறை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தேசியத் தலைவர் என்னுடன் பல தடவைகள் காவல்துறை எப்படி இருக்கவேண்டும், இக் கட்டமைப்பு ஆரம்பத்தில் எப்படி இருக்கும் பின்னர் எப்படி இருக்கும். தொப்பி, சீருடை எல்லாம் எப்படி இருக்கவேண்டும், மக்களுடன் எப்படி என்ன முறையில் அணுகவேண்டும் என்பன பற்றியெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து முடிவுகளைத் தந்தார். இதுவே எங்களது வளர்ச்சிக்குப் பிரதான காரணம். ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் பொலிஸாரது ஆக்கிர

> **ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய எமது அமைப்பு பொது மக்களுக்கு அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை வழங்கி வருகிறது**

மிப்புகளுள் இருந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரிடமிருந்து தான் நாங்கள் எமது காவல்துறைக்கு உறுப்பினர்களைச் சேர்த்துக கொள்கிறோம். அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட உடனேயே கடந்தகால அடக்குமுறை, ஒடுக்குமுறை பற்றிய வரலாற்று ரீதியான வகுப்புக்கள் எடுக்கப்படுகின்றன. இவற்றை நேரடியாக அனுபவித்தவர்களாகவே அவர்கள் உள்ளனர்.

நாகர் கோவில், சென்பீற்றஸ் தேவாலயங்களில் குண்டுகள் போடப்பட்டபோது நேரடியாக நின்று எமது மக்களுக்கு உதவியது தமிழீழக் காவல்துறை. இதை விட கிளாலிப்படுகொலைகள், குண்டுவீச்சுக்கள் என்பவற்றையெல்லாம் நேரடியாகப் பார்த்தவர்கள் தான் எமது காவல்துறை உறுப்பினர்கள். இதனால் வரலாற்று ரீதியாகவும், நேரடியாகவும் ஒடுக்குமுறைகளைக் கண்டு எமது மக்களுக்குச் சேவையாற்றும் எண்ணம் அவர்களிடம் மேலோங்கியுள்ளது. மக்களுக்காக அர்ப்பணிப்புடன் வேலை செய்வதால் எங்களால் பாரிய வளர்ச்சியை எட்டமுடிந்தது.

**கேள்வி :- யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் தங்களது பிணக்குகளை தமிழீழ காவல்துறை தீர்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வழிவகைகள் உண்டா?**

**பதில் :-** இப்போது குடாநாட்டுப் பொது மக்கள் சிலர் பளையிலுள்ள எமது பணிமனையில் தங்களது பிணக்குகளைத் தீர்க்க முற்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. எமது தாயகப் பகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலும் எமது பணிமனைகள் அமைக்கப்படும் போது தங்களது பிணக்குகளைச் சுலபமாகத் தீர்க்கமுடியுமென நம்புகிறார்கள்.

இதைவிட முக்கியமான விடயம் என்னவென்றால் தற்போது வெளிநாடுகளில் வாழும் எமது மக்கள் எங்களுடைய அனைத்துலக தொடர்பகங்கள் ஊடாக எம்மிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கேற்ப பிரச்சினைகள், பிணககுகள் தீர்க்கப்பட்டுள்ளமை சில முறைப்பாடுகளைத்

> **அனைத்துலக தொடர்பகங்கள் ஊடாக சர்வதேச நாடுகளிலுள்ளோரின் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதுடன், தொலைபேசி ஊடாகவும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்கின்றோம்**

தொலைபேசியூடாகக் கூடத் தீர்த்து வருகிறோம். இது எங்களுடைய காவல்துறையில் எமது மக்கள் வைத்திருககும் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. இதைவிட இலண்டன், கனடா போன்ற இடங்களில் தமிழ் மக்களுக்கிடையில் ஏற்படும் சில கோஷ்டி மோதல்கள் பற்றிய தகவல்களும் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அவற்றைப பதிவு செய்து வைத்திருக்கிறோம். எதிர்காலத்தில் அதைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படும்போது நீதியான முறையில் மக்களுக்கு விமோசனம் ஏற்படக்கூடிய விதத்தில் நடவடிக்கைகளை எடுப்போம்.

**கேள்வி:- புதிதாக எந்த எந்தப் பகுதிகளில் காவல்துறைப் பணிமனைகளை நிறுவ உத்தேசித்துள்ளீர்கள்?**

**பதில் :-** மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை, கரடியனாறு இதைவிட இந்த மாவட்டத்தில் இன்னுமொரு இடத்திலும் பணிமனையை நிறுவவுள்ளோம். மூன்றாவது இடத்தை இன்னும் தீர்மானிக்கவில்லை, ஆனால் அந்த மாவட்டத்தில் எதிர்காலத்தில் 5 பணிமனைகள் அமைக்கப்படும். திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே தம்பூரில் ஒரு பணிமனையுள்ளது. இன்னுமொரு பணிமனையை அங்கு திறக்கவுள்ளோம். மன்னாரில் அடம்பனில் உள்ள எமது பணிமனையில் படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து பெருமளவான மக்கள் வருகை தந்தும், பலவேறு பிணக்குகளைத் தீர்த்துச் செல்கிறார்கள்.

**கேள்வி:- இலங்கை ஒரு இறைமை உடைய நாடு என இங்கு புலிகளின் காவல்துறை நீதிமன்றம் என்பன செயற்படுவது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் எனவும் பௌத்த**

> **இலண்டன், கனடா போன்ற நாடுகளில் தமிழ் குழுக்களுக்கிடையே இடம்பெறும் கோஷ்டி மோதல்கள் குறித்த தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதற்கு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்**

**தேரர்கள் குறிப்பிடுகிறார்களே?**

**பதில்:-** வரலாற்று ரீதியான இரண்டு தேசிய இனங்கள் வாழ்கின்ற ஒரு தேசத்தில் ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை அடக்கி ஒடுக்க முற்படுகையில்தான் இரண்டு பகுதியினரும் தங்களுடைய இறைமையை இழக்கின்ற நிலைமைக்கு வருகிறார்கள். ஆனால் ஒடுக்கப்படுகின்ற இனம் விடுதலைக்காகப் போராடித் தனது இறைமையை காப்பாற்றிக் கொள்வது தவறில்லை. இந்த வகையில் எமது தேசத்தில் இறைமையை நாங்கள் காப்பாற்றுவதை எவரும் பிழையாக நோக்கமுடியாது.

**கேள்வி:- விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமுலாக்கப்படும் போது தமிழீழக் காவல்துறை கட்டமைப்பு எப்படி இருக்கும்?**

**பதில்:-** எமது மக்களின் அபிலாஷையும் எதிர்பார்ப்பும் தமிழீழக் காவல்துறை செயற்படவேண்டும் என்பது தான். இதனூடாகத் தான் தமிழர் தாயகப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கு சரியானமுறையில் நிலைநாட்டப்படும். மக்கள் நிம்மதியாக வாழமுடியும். இதைவிட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு எமது காவல்துறையால் தான் முடியும். சட்டத்தையும், ஒழுங்கையும் மட்டும் பேணும் காவல்துறையாக இல்லாமல் மக்களின் வாழ்வியலை முன்னேற்றும் அமைப்பாகவும் எமது காவல்துறை இருபபதால் எமது கட்டமைப்பு மேம்பாட்டுடன் முன்னெடுக்கப்படும். தென்னிலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எங்களுடைய காவல்துறையைப் பற்றிச்சரியாக மதிப்பிட்டு அண்மையில் வெளியிட்டுள்ள கருத்துக் கூட ஆழமானது. இதை விட சிங்கள மக்களும் எமது நடைமுறைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள்.

**கேள்வி:- காவல்துறைக்கு மேலும் ஆட்களைச் சேர்க்கும் நோக்கும் உண்டா?**

**பதில்:-** விடுதலைப்போராட்டத்தில் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பதற்காகப் போராளிகளுக்கு மிக்க பலமாக நின்று செயற்படக்கூடிய விதத்தில் தமிழீழ தேசியத் துணைப்படைக்கு ஆட்களைச் சேர்க்கிறோம். அவர்களின் குடும்பத்தின் நலன் கருதி சம்பளத் திட்டம் ஒன்றையும் அறிமுகம் செய்துள்ளோம்.

**கேள்வி:- சர்வதேச தரத்திற்கு தமிழீழக் காவல்துறையை உயர்த்தும் எண்ணம் உண்டா?**

**பதில்:-** எங்களுடைய காவல்துறையை வளர்க்கவேண்டும் என்பதில் பல நாடுகள் அக்கறையுடன் இருக்கின்றன. இதை

> **தேசிய இனமொன்று மற்றொரு தேசிய இனத்தை அடக்கி ஒடுக்க முற்படுகையிலேயே இறைமையை இழக்கும் நிலை உருவாகிறது.**

விட மேலதிகமாக குறிப்பிடமுடியாது. ஆனால் தொழில் நுட்பப் பயிற்சிகள் உட்பட சர்வதேச தரத்திலான சகல வளங்களையும் கையாளத் தொடங்கியிருக்கிறோம்.

**கேள்வி:- சிங்கள ஆட்சியாளர்களால் சரியான தீர்வு முன்வைக்கப்படுமா?**

**பதில்:-** பேரினவாதக் கொள்கைகளைக் காலம் காலமாக தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பின்பற்றுவதால் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி சிந்திக்கக் கூடிய சூழலில் அவர்கள் இல்லை. சிங்கள ஆட்சியாளர்களையே தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இந் நிலையில் அவர்கள் சரியான தீர்வைத் தருவார்கள் என்பது சந்தேகமே. சர்வதேசசமூகம் அவர்களை ஒதுக்கி சரியான தீர்வுக்காக அவர்களுக்கு முற்று முழுதான அழுததங்களைக் கொடுக்கவேண்டும். இன்னொரு பக்கத்தால் நாமும் விடுதலையை வெல்வதற்கு முயற்சிப்போம். இரத்தம் சிந்தாமல் எமது மக்களின் விடுதலையை வெல்லவே இப்போது முயற்சிக்கிறோம்.

**கேள்வ:- இறுதியாக இராணுவக் கட்டுப்பாட்டில் வாழும் தமிழ் உறவுகளுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?**

**பதில்:-** இளம் சமூகத்தினர் சமூகச் சீரழிவில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகின்றனர். இது இன அழிப்பு நடவடிக்கையில் முக்கியமான ஒரு விடயம் நிறைய பூர்வீக இனங்கள் இப்படி அழிக்கப்பட்டுள்ளன. இது வரலாற்றில் உள்ளது. சமூகத்தைச் சீரழிப்பதன் மூலம் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தி அவர்களைச் சீரழிவிற்கு உட்படுத்துவதில் இராணுவப் புலனாய்வு அதை வழிநடத்தும் அரசும திட்டமிட்டு செயற்படுகின்றன. இவற்றை நன்கு இனங்கண்டு பொது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். □

## மழையால் பாதிப்புறும் ஐ.சி.சி.போட்டிகள்

# இலங்கையணி அரையிறுதியை இழந்தது

# மே.இந்திய - தெ.ஆபிரிக்க போட்டி தடை

இலண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப்போட்டிகளில் மழை ரசிகர்களுகது ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.




இலங்கை-இங்கிலாந்து அணிகளிடையேயான போட்டி கடந்த வெள்ளியன்று மழையால் தடைப்பட்டதால் மீண்டும் சனிக்கிழமை இடம்பெற்றது.


முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்ட போது இங்கிலாந்து அணி 32ஓவரில் 3 விக்கெற்றுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று முன்தினம் தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெற்றுக்களை இழந்து 251ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அன்ட்ரூ பிளின்ரொப் மிகச் சிறப்பாக விளையாடி 104 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரது 3 ஆவது ஒருநாள் சதமாகும். இந்த 104ஓட்டங்களில் 3சிக்ஸர்களும் 9பவுண்டரிகளும் அடங்கும். டிரஸ்கோதிக் 66ஓட்டங்களையும் கொலிங்வூட் 39ஓட்டங்களையும் பெறறனா். சமிந்தவாஸ் 2 விக்கெற்றுக்களையும் பெற்றார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மீண்டும் மழையால் ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது 24ஓவர்களில் 5விக்கெற்றுக்களை இழந்து 95 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

மழையால்கூட இலங்கையணியை காப்பாற்ற முடியவில்லை. இலங்கையின் மோசமான துடுப்பாட்டத்தால் அது அரையிறுதிப் போட



டிக்கான தகுதியை இழந்தது. இரு நாட்களும் போட்டி மழையால் தடைப்பட்டதால் .போட்டியின் முடிவு 'டக்வேர்த்-லூயிஸ்' அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு இங்கிலாந்து அணி 49ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன்படி இங்கிலாந்து அணி



அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று அவுஸ்திரேலிய அணியுடன் மோதவிருக்கிறது.

இதேவேளை, தென் ஆபிரிக்கா மேற்கிந்திய தீவுகள் அணிகளிடையே ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியும் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.'

நேற்று முன்தினம் ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் தென் ஆபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தா. அதன்படி களமிறங்கிய தென் ஆபிரிக்க அணி 50ஓவர்களில் 6விக்கெற்றுக்களை இழந்து 246ஓட்டங்களைப பெற்றது. இதில் கிப்ஸ் சிறப்பாக விளையாடி 101ஓட்டங்களை பெற்றார் ஸ்மித் 43ஓட்டங்களையும் ரூடுல்ப் 46 ஓட்டங்களையும் பெறறனா். பந்துவீச்சில் கைல் 3விக்கெற்றுக்களையும் பிரட்ஷோ 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது 6 ஓவர்களில் விக்





கெற் இழப்பின்றி 20ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கைல் 12ஓட்டங்களையும் கின்ட்ஸ் 6 ஓட்டங்களையும் பெற்றனா். உதிரிகளாக 2 ஓட்டங்கள் பெறப்பட்டன. ஆட்டம் தொடர்ந்து நேற்று நடைபெற்றது. (ற-7)

### விரக்தியில் டிக்கலோ

உலகக் கிண்ணப்போட்டியில் அரையிறுதிப் போட்டிவரை முன்னேறிய கென்ய அணி மினி உலகக் கிண்ணப் போட்டியில் படுதோல்வி அடைந்ததால் அணித தலைவர் டிக்கலோ"மிகவும் விரக்தி நிலையில் காணப்படுகிறார்.

நாடு திரும்பியதும் முதல் வேலையாகத் தனது தலைமைப் பதவியை உதறிவிடப்போவதாக அவர் கூறியுள்ளார். கெனய அணித்தலைவராக இருந்தது போதும். இனி யாராவது இளைஞர் தலைமைப் பதவியை பொறுப்பேற்கட்டும் என அவர் விரக்தியுடன் கூறியிருக்கிறார்.

தலைமைப்பதவியிலிருந்து விலகினாலும் அணியில் தொடர்ந்து இடம்பெறுவேன் எனவும் அவர் கூறியுள்ளார். (ற-7)

### உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டி

யாழ.உதைபந்தாட்ட லீக் நடாத்தும் ஏ.பி.சி.லீக் சுற்றுப்போட்டியின் இறுதிச்சுற்றுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில நடைபெறவுள்ள இப் போட்டிகள் நாளைமுதல் எதிர்வரும் 30ஆந் திகதிவரை நடைபெறவுள்ளன. இன்று மாலை 4 மணிக்கு 'பி' பிரிவில் சென். நீக்கிலஸ் 'பி' அணியை எதிர்த்து, யாழ்பல்கலைக கழக அணி விளையாடவுள்ளது. மாலை 5மணிக்கு சென் அன்ரனீஸ் 'ஏ' அணியை எதிர்த்து கலைவாணி 'ஏ'அணி விளையாடவுள்ளது. போட்டி ஆரம்பமாவதற்கு 15நிமிடங்களுக்கு முன்னர் விளையாடும் கழகங்கள் மத்தியஸ்தரிடம் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-7)

# டெண்டுல்கர் அணியில் இல்லாதது

# பாகிஸ்தானுக்கு சாதகமானது

## இன்ஷமாம் உல் ஹக் பேட்டி

இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லாதது எமக்கு சாதகமான விஷயம், 'என்று மகிழ்ச்சியடைகிறா் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஷமாம் உல்ஹக்.



மினி உலகக் கோப்பை கிரிக்கெற்றின் மிக முக்கியமான, மிக எதிர்பார்க்கப்படும் மோதல் எட்ஜ் பாஸ்டன் மைதானத்தில் நடக்கும இந்தியா - பாகிஸதான் அணிகளிடையேயான போட்டியாகும். இது முக்கியமான போட்டி இதில் வென்றால். அரையிறுதிக்கு முன்னேறலாம். இலலையென்றால் நாட்டிற்கு திரும்பவேண்டியதுதான் என பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் அளித்த பேட்டியில் கூறியுள்ளார். இந்தியாவுக்கு எதிரான போட்டியை நம்பிக்கையுடன் அணுகுகிறோம். இந்தப் போட்டி முடிவை யாரும் கணிக்க முடியாது. அன்றைய தினத்தில் சிறப்பாக விளையாடும் அணியே வெற்றிபெறமுடியும். பந்துவீச்சில் பலமாக இருக்கிறோம். வேகப்பந்து வீச்சாளர் தவிர கென்யாவுக்கு எதிரான போட்டியில்' சுழற்பந்து வீச்சாளர்கள் அப்ரிடி, சோகிப் மாலிக் இருவரும் பிரமாதமாகப் பந்து வீசினார்கள். வேகப்பந்து வீச்சு, சுழல்பந்து இரண்டும் நன்றாக இருப்பதால், இந்தியாவைக் கட்டுப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தவிர இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லை. அவர் மிகச்சிறந்த வீரர். அவர் இல்லை என்பது இந்தியாவை எதிர்த்து ஆடும் அணிகளுக்கு சாதகமான ஒரு விஷயம். நாங்களும் அதைப் பயன்படுத்திக் கொள்வோம் என தெரிவித்தார் இன்சமாம்.

அவுஸ்திரேலிய அணியின் முனனாள் வேகப்பந்து வீச்சாளர் புருஸ் ரீட் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார். பாகிஸ்தான் மோதல் பற்றி அவர் அளித்த பேட்டியில் பாகிஸ்தான் துடுப்பாடட வீரர்களின் ஆட்டத்தை நான் அதிகம் பார்த்ததில்லை. ஆகவே அவர்கள் விளையாடிய போட்டிகளின் வீடியோ காட்சிகளைப் பார்த்து,' புதிய வியூகம் வகுத்துவருகிறேன், சஹப் அப்ரிடி போன்ற அதிரடி வீரர்கள் ஆடும் போது பரிசோதனை முயற்சி வேண்டாம் என்று இந்திய பந்து வீச்சாளர்களிடம் சொல்லியிருக்கிறேன். நேர்த்தியான பந்துவீச்சினால் மட்டுமே பாகிஸ்தானை கட்டுப்படுத்தமுடியும். முதல் 15 ஓவர்களில் விக்கெற் எடுக்க ஆசைப்பட்டு பந்து வீச்சில் பரிசோதனை முயற்சி செய்வது ஆபத்து. முதல் 15 ஓவர்கள் எதிரணி ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவது தான் முக்கியம் அப்படிச்செய்தால் ஸ்கோரை அதிகரிக்க வேண்டிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்படும். அதன்பின் தானாக விக்கெற் விழும். இந்த விஷயத்தையும் இந்திய வீரர்களிடம் வலியுறுத்தியிருக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார். (ற-7)

# இந்திய —பாகிஸ்தான் தொடருக்கு

# ரசிகர்களிடையே அதீத எதிர்பார்ப்பு

இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.சி.சி.சம்பியன் கிணண கிறிக்கெற் போட்டிகளில் அனைவராலும் ஆவலுடன் எதிர் பார்க்கப்படுவது இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான போட்டியாகும்.

இப்போட்டி நடக்கும் பேர்மிங்காம் நகரில் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதிலும் பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்தவர்கள் அதிகம் உள்ளனர்.

இப் போட்டிக்கான அனுமதிச் சீட்டுக்கள் விற்பனை செய்யத் தொடங்கிய ஒன்றரை மணி நேரத்திலேயே அனைத்து அனுமதிச் சீட்டுக்களும் விற்பனையாகி விட்டன. இதிலிருந்து எந்தளவிற்கு இந்திய-பாகிஸ்தான் அணிகளுக் கிடையேயான போட்டியை ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பது புலனாகிறது.

ஒரு ஆசனம்கூட காலிஇல்லை. இந்த அனுமதிச்சீட்டு விற்பனையில் கள்ளச்சந்தை நடவடிக்கை இடம்பெற்றிருக்கிறது. 3 ஆயிரம் ரூபா பெறுமதியான அனுமதிச் சீட்டை மொத்தமாக வாங்கி வைதது இறுதி நேரத்தில் 20 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்திருக்கிறார்கள் சில கள்ளச்சந்தை வியாபாரிகள்.

ஆனால், பணம் அதிகம் கொடுத்து வாங்கிய ரசிகர்களோ 'பணத்தை பற்றி பிரச்சினையே இலலை, எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மழைவந்து போட்டியை குழப்பிவிடக்கூடாது என்பதே எமது பிரார்த்தனை' என்கிறார்கள்.

(ற)

# பாரா ஒலிம்பிக் போட்டி எதென்ஸில் ஆரம்பம்

உடல் ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் எனப்படும் பாரா ஒலிம்பிக் போட்டிகள் கடந்த சனியன்று எதென்ஸில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளன. கிரீஸ் தலைநகர் எதென்ஸில் கடந்த மாதம் ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடந்தமை இன்னும் மறக்கப்படவில்லை.

இந்நிலையில் ஊனமுற்றோருக்கான பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்பவிழா கடந்த சனியன்று எதென்ஸ் ஒலிம்பிக் மைதானத்தில் நடந்தபோது,

கிரீஸ் நாட்டு தேசிய கீதம் ஒலிக்க, 136நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் சக்கர நாற்காலி, உதவியாளர்கள் துணை, ஊன்றுகோல் உதவியுடன் மைதானததை வலம்வந்தனா். முன்னதாக இந்த தொடரில் 142நாடுகள் கலநது கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் 6 நாடுகள் கடைசி நேரத்தில் பங்கேற்கமுடியாத தங்கள் நிலையை பாரா ஒலிம்பிக் சபையிடம் தெரிவித்திருந்தது. இதைத் தொடர்ந்து 136 நாடுகள் இதில் கலந்துகொள்வதாக சபை அறிவித்தது. 2000ல் நடந்த சிட்னி பாராஒலிம்பிக் போட்டிகளில் 125 நாடுகளே பங்கேற்றன.

தொடக்கவிழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறின. ஒலி, ஒளி காட்சிகள் காதுக்கும், கண்களுக்கும் விருந்தாக அமைந்தன. நடன நிகழ்ச்சிகளும் நளினமாக இருந்தன. உடலில் ஊனம் இருந்தாலும் உள்ளத்தில் உறுதியோடு இதில் பங்கேற்கவந்த வீரர்களுக்கு பார்வையாளர்கள வாழ்த்துமழை வழங்கியவண்ணம் இருந்தனா. வீர, வீராங்கனைகளை உற்சாகமாக வரவேற்று, 2004 பாரா ஒலிம்பிக் போட்டிகளை ஏதேன்ஸ் ஒலிம்பிக் சபைத தலைவர் தொடக்கிவைத்தார். 12 நாட்கள் நடைபெறும் இந்த பாரா ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி நிறைவடையும். (ற-7)

## விளையாட்டு செய்திகள்



ஊனத்தை வெல்வோம்... ஊனத்திலும் வெல்வோம்.. கிரீஸ் தலைநகர் ஏதென்சில் உடல் ஊனமுற்றோருக்கான ஒலம்பக் எனப்படும் பாராஒலிம்பக் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் துவங்கின. ஒலிம்பக் போட்டிகளுக்கு நிகராக நடத்தப்படும் இந்த தொடரில், தன்னம்பக்கையையும், மன உறுதியையும் கொண்டு 136 நாடுகளை சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். துவக்க விழா அணி வகுப்பன் போது, துர்க்மெனிஸ்தான் நாட்டை சேர்ந்த வீரர் ஒருவர் கைகளால் நடந்து பார்வையாளர்களை அசத்தினார்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. - குறள்

வலம்புரி

## உண்மை நிலையை நோர்வே அறிவிக்கவேண்டும்

சமாதான முயற்சியில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லையெனக் கூறிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், மிகவிரைவில் பேச்சு வார்த்தை மேசைக்கு இருதரப்பினரும் வருவார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்று ஆறு மாதங்கள் கடந்தும் இன்னமும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வில்லை.

இந்நிலையில், நோர்வேத் தூதுவர் எரிக் சொல் ஹெய்மின் நம்பிக்கையானது உதட்டளவில் கூறப் பட்டதுபோல் தெரிகிறது. ஏற்கனவே இருதரப்பினரு டனும் சந்தித்துவிட்டு பொதுவான கருத்தை வெளி யிடும்போது, சமாதான முயற்சியில் எந்தவித முன் னேற்றமும் ஏற்படவில்லை எனக்கூறிய எரிக் சொல் ஹெய்ம், தமிழ்ப் பத்திரிகையாளருடனான சந்திப்பின் போது சமாதானப் பேச்சு விரைவில் நடைபெறும் என கூறியுள்ளார்.

எரிக் சொல்ஹெய்மின் மேற்போந்த கருத்து யுத் தத்தால் பாதிக்கப்பட்டு சமாதானத் தீர்வுக்காகக் காத்திருந்த தமிழ்மக்களுக்கு ஆறுதல் கூறுவதற்கா கக் கூறப்பட்டதுபோல எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில், அரசு - விடுதலைப் புலிகள் என்ற இரு தரப்பினருக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தை என்பது விடுதலைப் புலிகளால் முன்வைக் கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையை அரசு ஏற் றுக்கொள்வதிலேயே தங்கியுள்ளது.

இடைக்கால நிர்வாகசபையை அரசு ஏற்காத வரை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் செல்லப்போவதில்லை என்பது உறுதி. அதே வேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர சில் ஜே.வி.பி. அங்கம் பெற்றிருக்கும் வரை விடுத லைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபையை அரசு ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை.

ஆக, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடை யிலான சமாதானப் பேச்சு சாத்தியப்படவேண்டுமா யின் இடைக்கால நிர்வாக சபை குறித்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டை எட்டவேண்டும்.

ஆனால், இருதரப்பினருடனும் நோர்வேத் தூது வர் எரிக் சொல்ஹெய்ம் நடத்திய பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடைக்கால நிர்வாகசபை விடயத் தில் எந்தவித அசைவையும் இருதரப்பிலும் ஏற்படுத்த வில்லை.

அவ்வாறாயின், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை மிக விரைவில் நடைபெறும் என்ற எரிக் சொல்ஹெய்மின் நம்பிக்கை தமிழ்மக்களை ஆற்றுப்படுத்துவதற்கான வெறும் வார்த்தையேயன்றி அதில் எந்தவித நிஜமும் இல்லை என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

சமாதான முயற்சில் ஈடுபட்டுள்ள நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுக்கின்ற அறிக்கை களின்படியே சமாதானத்தில் காணப்படும் தடைகள் அல்லது முன்னேற்றங்கள் குறித்து மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

எரிக் சொல்ஹெய்மின் தகவலை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கின்ற நாட்டு மக்களுக்கு உண்மைத் தகவலை உடனுக்குடன் தெரியப்படுத்துவது அவ ரின் கடமையாகும்.

சமாதான முயற்சிகளில் மந்தநிலை காணப்படும் போது, அதனை மறைத்து முன்னேற்றம் ஏற்படுவது போல நோர்வேத் தரப்புக் கூறுமாயின் அதனால் ஏமாற்றமடைபவர்கள் மக்களே. எனவே, மக்களை ஏமாற்றும் தகவல்களை வழங்குவது இறுதியில் பெரும் ஆபத்தைத் தரும் என்பதால், உண்மை நிலையை எவருக்கும் அஞ்சாமல் நோர்வேத் தரப்பு எடுத்துக்கூறவேண்டும்.

அதுமட்டுமன்றி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எந்தத் தரப்புத் தடையாக இருக்கின்றதோ, அந்தத் தரப்பை வெளியிட்டு, எந்த இடத்தில் குறித்த தரப் பின் செயற்பாடு தவறாக உள்ளதென்பதையும் நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்ட வேண்டும். இது, மக்களின் எதிர்காலத் தீர்மா னங்களுக்குப் பேருதவியாக அமையும்.

## ஐ.நா.வின் 59 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுவார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது பொதுக் கூட்டத் தொடா நாளை செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் ஆரம்பமா கவுள்ளது.

நாளைய தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதில் கலந்துகொண்டு விசேட உரை ற்றுவார்.

நாளை மறுநாள் 22ஆம் திகதி உலக நாடுகளின் பிரதி நிதிகளை வரவேற்கும் நிகழ்வை ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க தலைமையேற்று நடாத்தவுள்ளார்.

இந்தியப பிரதமா் மன்மோகன் சிங் ,பாகிஸ்தான் ஜனாதி பதி பா்வேஷ் முஷராப் உட்பட பல நாடுகளின் தலைவா்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனா்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கைத்தொழில் சுற்றுலாத்துறை முதலீட்டு அமைச்சா் அனுரா பண்டார நாயக்கவும் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக அவரது அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கிடையில் எதிர்வரும் 26ஆம் திகதி அத்தன கலையில் அமரா் பண்டாரநாயக்காவின் நினைவு தினநிகழ் வுகள் இடம்பெறவுள்ளதாகவும் அதில் ஜனாதிபதி கலந்து கொள்வாா் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ?

(கொழும்பு)

பொலஸ் மா அதிபா் பதவிக்கான ஜனாதிபதியின் சிபாா்சு குறித்து துரிதமாக ஆராய்வதற்கு அரசியல் அமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது கூட்டத் தொட ரில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க நேற்று முன்தினம் நியூயோா்க் பயணமானாா்.

அவா் நியூயோா்க் புறப்படுவதற்கு முன்னா் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபா் சந்திரா பொ்னாணடோவின் பெயரை பொலிஸ்மா அதிபா் பதவிக்கு சிபாா்சு செய்திருந்தாா்.

இதேவேளை பொலிஸ்மா அதிபா் இந்திரா டி சில்வா எதிா் வரும் 30ஆம் திகதி பொலிஸ்மா அதிபா் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளாா்.

இவரது பதவிக்காலம் இரண்டு தடவைகள் ஏற்கனவே நீடிக் கப்பட்டமை தெரிந்ததே. (க-61)

## அ.அட்டை விநியோகத்தில் புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

தோ்தலில் அடையாள அட்டை வழங்குவது கட்டாயமாக் கப்பட்டால் அவற்றை விரைவில் வழங்குவதற்கு நட வடிக்கை மேற்கொள்ளப்படுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளா் தெரிவித்துள்ளாா்.

இந்த விடயம் தொடாபாக தேசிய அடையாள அட்டை களைத் துரிதமாக வழங்குவதற்கு விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஏறாத்தாழ 25இலட்சம் வாக் காளா்கள் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வில்லையென்பது தெரியவந்துளளது.

மோசடியான வகையில் அடையாள அட்டைகள் வழங்கப் படுவதை தவிா்க்கும் வகையில் தற்சமயம் நடைமுறை யில் உள்ள ஒருநாள் சேவையை மூன்றுநாள் சேவையாறறு வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ந-8)

## ஓய்வூதிய முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுவோரின் மத்தியில் நிலவுகின்ற ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதற்கு பொது நிா்வாக அமைச்சு தீா்மானித்துள்ளது.

கடந்த இருபது வருடங்களாக நிலவிவரும் ஓய்வூதிய முரண்பாட்டை புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் நீக்கமுடியுமென பொது நிா்வாக அமைச்சின் செயலாளா் தெரிவித்தாா.

விசேடமான பாதுகாப்புப் பிரிவின் ஆசிரியா்கள் ஆகியோ ருககு ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதன் மூலம் நிவா ரணம் கிடைக்குமெனவும் அவா் மேலும் குறிப்பிட்டாா்.(ந-8)

## கனேடியத் தூதரக அதிகாரிகள் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைபபொறுப் பாளா் சு.ப. தமிழ்ச் செல்வனுக்கு கனேடியத் தூதரக அதி காரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று திங் கட்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடு தலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற வுள்ளது.

கனேடித் தூதுக்குழுவிற்கு இலங்கைக்கான தூதுவா் வலேறி ரேமன் தலைமை தாங்கவுள்ளாா்.

இவா் ஏறகனவே இரண்டு தடவைகள் தமிழீழ அரசியல்த் துறைப் பொறுப்பாளா் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவாா்த்தைக்கு கனேடிய அரசு உதவி வருவதாக கனே டியப் பிரதமா் போல் மாா்ட்டீன் கடந்த சில மாதங்களுக்கு முன் வாஷிங்டன் சென்றிருந்தபோது வெளியிட்ட முக்கி யமான அறிக்கையில் தெரிவித்தாா்.

அத்துடன் ஒன்ராறியோ மாகாண முன்னாள் முதல்வா் பொப்றே தலைமையிலான பெடரேசன் போரம் என்கிற அமைப்பு இலங்கையின் சமாதானப் பேச்சுவாா்த்தை சம்பந்தமான முயற் சிகளில் இரு தரப்பையும் பங்கேற்க வைப்பது தொடா்பான ஆலோசனைக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வரு வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## பிரசவ விடுமுறை தொடர்பான புதிய சுற்றுநிருபம் வெளியீடு

(சுதுமலை)

தாபன விதிக்கோவையிக் அத்தியாயம் -12 இன் பிர காரம் வழங்கப்பட்ட பிரசவ விடுமுறை தொடா்பான புதிய சுற்று நிருபம் ஒன்றை அரசாங்கம் உள்நாடடு அலுவல்கள் அமைச் சின் செயலாளா் எஸ்.சி. மான்னப்பெரும சகல அமைச்சுக் களின் செயலாளா்கள் மற்றும் தலைவா்களுக்கும் அனுப்பி வைத்துள்ளாா்.

அப்புதிய சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங் கள் பின்வருமாறு,

★ நிரந்தர, தற்காலிக,அமய அல்லது பயிலுநா் பெண் அரச அலுவலா்கள் ஒவ்வோா் பிள்ளைப் பிறப்புக்குமாக 84 நாட்கள் பிரசவ விடுமுறை வழங்க அரசு தீா்மானித்துள்ளது. இது 23-6-2004 திகதி முதல் நடைமுறைப்படுத்தத தீா் மானிக்கப்பட்டுள்ளது.

★ பெண் அரச ஊழியா் ஒருவா் ஒவ்வொரு பிள்ளைப் பிறப்புக்கும் முழுச் சம்பளத்துடனான 84 நாள் வேலைநாள் விடுமுறைக்கு உரித்துடையவா்.அத்துடன் இவ் விடுமுறை பெறுவதற்கு ஓா் வைத்தியச் சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழோ சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

★ பிரசவ விடுமுறைகளை கணிக்கும் போது அக்காலத் தினுள் வருகின்றது அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனி, ஞாயிறு தினங்கள் உள்ளடக்கக்கூடாது .

★ இவ் விடுமுறைக்காலத்தை அலுவலரின் எஞ்சியிருக்கும் விடுமுறையிலிருந்து கழிக்கக் கூடாது என்பதுடன் இவ் விடுமுறைக் காலத்தை முழுச் சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருதப்படவேண்டும்.

★ பிறக்கும் போது மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளை பிறப் பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்ல முன் குழந்தை மரணிக்கின்ற சந்தா்ப்பத்திலும் குழந்தையின் மரணச்சான்றிதழ் அல்லது வைத்தியச் சான்றிதழை சமா்ப்பித்து விசேட சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக பிள்ளை பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வாரகால விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

★ கருச்சிதைவு (**Aportion**) ஏற்பட்டால் கூட வைத்தியச் சான்றிதழ் இருக்குமிடத்து உரித்தான ஓய்வு விடுமுறைகளை பெற்றுக்கொள்ளலாம்.

★84 நாட்கள் பிரசவ லீவு முடிவடைந்த பின் தனது குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதற்காக வேலை முடிவடையும் நேரத்திற்கு முன்னதாக ஒரு மணித்தியாலயம் முன்பு வேலை இடத் திலிருந்து புறப்பட அனுமதி வழங்கவேண்டும். இது குழத்தை யின் வயது ஆறு மாதம் வரை மட்டுமே.

★மேலும் பெண் அரச அலுவலா் ஒருவா் கா்ப்பமுற்றி ருக்கும் காலம் ஐந்து மாதங்கள் ஆகும்போது கடமைக்கு அரை மணித்தியாலயம் தாமதமாக வரவும் வேலை முடி வடையும் நேரத்திற்கு அரை மணித்தியாலம் முன்னதா கவும் புறப்பட இடம் அளிக்கப்படுகின்றது.

இச் சலுகை பிரசவ விடுமுறை பெறும்வரை மட்டுமே. அத்துடன குழந்தை சாதாரண நிலையில் இருந்தது என பிரசவ பெண் நோய் மருத்துவ நிபுணா் (**V.OG**) ஒருவா் சிபாா்சு செய்திருந் தால் அத்தகைய குழந்தைகள்தொடா்பாக சாதாரண பிரசவ விடுமுறை முடிவடைந்த பின் விசேட கவனத்துடன் குழந்தையை தாய் விசேட கவனத்துடன் பாதுகாத்துக்கொள்வதற்கு அரச சிறுவா் நோய் மருத்துவ நிபுணா் சிபாா்சு செய்தால் ஆறு மாதகால விசேட சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குழநதை பிரசவத்தால் வேறுவிதமான நோய்கள் ஏற்பட்டு, தாய் மேலும் ஓய்வில் இருப்பது அவசியம் என பெண் நோயி யல் மருத்துவ நிபுணா் சிபாா்சு செய்யும் சந்தா்ப்பத்தில் இவ் விசேட விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியும் (ந-252)

## கால் நடைகளை கட்டி வளர்க்குக!

(பொன்னாலை)

சாவகச்சேரி வடக்கு பகுதிகளில் காலபோக விதைப்பு நேரம் நெருங்குவதால் கால்நடைகளைக் கட்டி வளா்க்குமாறு அப்பகுதி விவசாய சம்மேளனத்தலைவா் நா. நல்லதம்பி பொது மக்களைக் கேட்டுள்ளாா்.

இதேவேளை, விதைநெல் தேவைப்படும் காலபோக நெற் செய்கையாளா்கள் தமது விண்ணப்பங்களை தமக்கு அனுப்பி வைக்க முடியும் என்றும் அவா் மேலும் அறிவிததுள்ளாா். (க-49)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ . நீவரம் பில்லா வலிமை பெற்றவன் உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.

சுவாமி விவேகானந்தர்

# மரவள்ளி மூலம் இலங்கையில் பெற்றோல் உற்பத்திக்கு முயற்சி

(கொழும்பு)

மரவள்ளி மூலம் பெற்றோல் மற்றும் டீசல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை வடமேல் மாகாணத்தில் உள்ள குளியாப்பிட்டிப் பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வடமேல் மாகாண முதலமைச்சர் அதுல விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வர்த்தக தூதுக்குழு ஒன்றுடன் அண்மையில் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் பின்னரே இத்தகைய தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக விஜயசிங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இத்தகைய தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் நாட்டில் எரிபொருள் உற்பத்தியை மேற்கொள்வதுடன், எரிபொருள் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருவதையும் கட்டுப்படுத்தலாம்.

இத் தொழிற்சாலை மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது மட்டுமன்றி தரிசு நிலங்களில் மரவள்ளியைப் பயிர் செய்வதன் மூலம் விவசாயிகள் மேலும் தங்கள் வருவாயை பெருக்கிக்கொள்ளவும் முடியும்.

இலங்கையில் முதன்முறையாக இத்தகைய தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளமை குறித்துப் பலர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் மரவள்ளி மிகச் செழிப்பாக வளரும் என்பதினாலேயே இத்தகைய தொழிற்சாலை வடமேல் மாகாணத்தில் நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டமெதுவும் அரசாங்கத்திடம் இல்லை

## அரியநேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்மக்களின் பிரச்சினைகளை இதய சுத்தியுடன் தீர்க்கக்கூடிய எந்தத் திட்டமும் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் இல்லை.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க இடையறாது போராட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

பட்டிருப்புக் கல்வி வலயத்தில் உள்ள அம்பலாந்துறையில் கலைமகள் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போதைய அரசாங்கத்தின் ஓர் அங்கமாகத் திகழும் ஜே.வி.பியினர், தமிழ விடுதலைப் புலிகள் கோரிவரும் இடைக்கால நிர்வாகசபையை வழங்கவேண்டாம் எனக் கூக்குரலிட்டு வருகின்றனர்.

அத்துடன் நாளுக்குநாள் நாட்டில் வன்முறைகளும் கொலைகளும் இடம்பெற்று வருவதால் யுத்த நிறுத்தம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இதனால் தமிழ் மக்கள் அனைவரும் உரிமையை வென்றெடுக்க ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் போராடவேண்டும் என்றார். (க-61)

# சமாதானப் பேச்சை...

புலிகளால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. இவ் யோசனை தொடர்பில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தயாராக இருந்தார். அவ்வேளை இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகத் தெரிவித்தே சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி. தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்தே வந்தது. இக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த ஜனாதிபதி தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நேரத்துக்கு நேரம் மாறி மாறி கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அந்த இணையத்தளத்தின் செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிரந்தர அரசியல் தீர்விற்கான ஆரம்பகட்ட அரசியல் செயற்பாட்டிற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை கையளிக்கப்பட்டது. அந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்காது இழுத்தடிப்புச் செய்வதற்காக அரசாங்கம் தற்போது பல்வேறு முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொக்குவில் இந்து மாணவர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம் இன்று

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றவிருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

2004 ஏப்ரலில் நடைபெற்ற பரீட்சையில் முதற்தடவை தோற்றிய மாணவர்களை இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார். (ந)

# பவளவிழா நடைபவனி

(பொன்னாலை)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழா நடைபவனி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

இப்பவனியில் வித்தியாலயத்தின் பெற்றோர், பழையமாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை சமூகம் கேட்டுள்ளது. (ந-49)

# அரசுக்கு எதிராக...

அரசாங்கத்தை வீழ்த்தினோம். பின் அரச்சாங்கம் எமது கைகளுக்கு வந்தது.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐ.தே.மு. தனது ஆதரவைத் தெரிவித்துவிட்டது. அப்படியிருக்க சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான தேசிய சமாதானசபை அமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புவது ஏனென்று தெரியவில்லை. இது பேச்சுக்கள் தொடங்கப்படுவதைத் தாமதிப்பதற்கு செய்யப்படும் உபாயம் என்றே இதைக் கருதவேண்டியிருக்கிறது.

இவ்விடயத்தில் அரசாங்கத்திற்கு ஜே.வி.பியுடன் உட் பிரச்சினைகள் இருக்கும் நிலையில் தாமதத்திற்கான காரணங்களை எதிர்க்கட்சி மீது சாட்டிவிட ஜனாதிபதி முயற்சிப்பது தெரிகிறது. ஜனாதிபதி விசுவாசத்திதுடன் பேச்சுக்களை நோக்குவாராக இருந்தால் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களைத் தொடங்கலாம். பாராளுமன்றப் பெரும்பான்மை பற்றி சந்தேகம் கொள்ளும் தேவையிருக்காது.

ஜே.வி.பி. கூறும் சோசலிசம் உலகின் எந்த நாட்டிலும் இல்லை. ஒரு இடதுசாரிக் கட்சி ஒரு முதலாளித்துவக் கட்சியுடன் இணைந்து ஒரு சோசலிச ஆட்சியை ஏற்படுத்தமுடியாது. 1970 -இல் ஐக்கிய இடதுசாரி முன்னணியை அமைத்த என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டீ சில்வா, பீற்றர் ஹென்மன் போன்றவர்கள் இறுதியில் மக்களால் நிராகரிக்கப்பட்டமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட்கட்சிகளுக்கு 1977 ஆம் ஆண்டு தேர்தலில் நடந்ததே அடுத்த தேர்தலில் ஜே.வி.பிக்கும் கிடைக்கும். இன்னும் சில காலத்திற்கு ஜே.வி.பியினர் அமைச்சர்களாக இருப்பார்களாயின் மிக மோசமான தோல்வி அவர்களுக்காகக் காத்திருக்கிறது. இவ்வாறு ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். (த-06)


# கண்ணீர் அஞ்சலி



யாழ். வணிகர் கழகத்தின் மூத்த உறுப்பினரும், முன்னாள் தலைவரும், தற்போதைய உப செயலாளரும், யாழ்ப்பாணம் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

## விஸ்வலிங்கம் குலரத்தினம்

அவர்கள் 17.09.2004 அன்று காலமானதையிட்டு யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த துக்கத்தினை அனைத்து வணிகர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அவர் ஸ்தாபன ஊழியர்களுக்கும் எமது மிகுந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை அனைவரும் வேண்டுவோமாக.

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(C/530)


# நீர்கொழும்பில்...

நேற்று முன்தினம் பொரளையில் பாதாள உலக கோஷ்டிகளிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். (ச)

# பயிற்சிக்கு...

துவப் பேரவைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கமுடியும்.

முதற்தொகுதியாகப் பெயர்கள் வெளியிடப்பட்ட பட்டதாரிகள் தற்போது பயிற்சி பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

# கனடா பொங்கு...

கனடாவிலுள்ள சிங்கள அமைப்புக்கள் இலங்கை அரசின் நிதியுதவியில் இயங்கிவரும் அக்கடமிற் என்ற இணையத்தளத்தைப் பயன்படுத்தியே இத்தகைய விசமத்தனமான பிரசாரங்களை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் திட்டமிட்டபடி பொங்கு தமிழ் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கனடாவில் வாழும் தமிழர்களை தமிழ் உணர்வற்ற தமிழர்கள் எனப் பிரசாரம் செய்யமுற்படும் சிங்கள இனவாத ஊடகங்களின் பிரசாரத்தை முறியடிக்க கனடாவிலுள்ள ஈழத் தமிழர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக கனடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (க)






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.